# கிழக்கு கடற்கரை ராகம்

கடற்கரை புனித அந்தோனியார் திருத்தலம் பாலவாக்கம்

விலை ரூ. 20/-

மார்ச் 2025 மாத இதழ்

ஆண்டு சந்தா ரூ. 250/-





## நம்பிக்கையால் சோதனையை வெல்லும் தவக்காலம்.

# திருத்தல நிகழ்வுகள்





















கடற்கரை
புனித அந்தோணியார்
திருத்தலம்
பாலவாக்கம்

# கிழக்கு கடற்கரை ராகம்


**ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்**
அருட்பணி. **காணிக்கைராஜ் G**

**ஆசிரியர் குழு**
அருட்பணி. **அசோக் JP.**
அருட்பணி. **ஜேசு**
அருட்பணி. **அந்தோணி ஜோசப்**
திரு. **ரோனா ஆல்பர்ட்**
திரு. **சைமன்**
திரு. **லூர்து எஸ்.ராஜ்**
திருமதி. **நற்கருணைமேரி**

**வடிவமைப்பு**
**GB.பிரிண்டர்ஸ்**

**அச்சில் உதவி**
**L.சுபாஷினி**



**திருத்தல முகவரி**
பாலவாக்கம் கடற்கரை
புனித அந்தோணியார் திருத்தலம்
38, எம்.ஜி.ஆர்.சாலை
பாலவாக்கம், சென்னை – 41
தொ.பேசி: (044) 2449 3684, 2449 3442
**மின்னஞ்சல்:** seashorestantony@yhoo.co.in
**இணையம்:** www.seashorestanthony.org


## உள்ளே...

*ராகம் – 108*

## மார்ச்– 2025


ஆசிரியர் பக்கம் ....... 02

புதுமைப் பெண் மரியா
அருட்பணி. **அசோக் பிச்சைமுத்து** ....... 03

முயற்ச்சி செய் உன்னால் முடியும் வரை
அருட்பணி. **ஜேசு** ....... 04

ஞாயிறு மறையுரைகள் ....... 06
**அருள்முனைவர் அந்தோணி ஜோசப்**

நம்முடன் தூய ஆவியார்
**ரோனா ஆல்பர்ட்** ....... 20

இதயத்தின் திரையிலிருந்து வாய்பேசட்டும்
**தியானா பூஜன்** ........ 23

புவியிடம் காட்டி
**லூர்து எஸ்.ராஜ்** ........ 25

அகில உலக மகளிர் தினம்
திருமதி. **நற்கருணைமேரி** ........ 27

புனிதசூசையப்பர் ஏன் கொண்டாடப்படுகிறார்?
**காந்தி ரோஸ்** ........ 29

## ஆசிரியர் பக்கம்

# அருட்பணி. காணிக்கைராஜ்
### திருத்தல அதிபர்



**கடற்கரை ராகம் வாசக நண்பர்களுக்கு! அன்பான வணக்கத்தையும் ஜெபங்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.**

**தவக்காலம்**

இம்மாதம் 5–ஆம் தேதி தவக்காலத்தை துவங்குகிறோம். தவக்காலம் வருத்தத்தின் காலமாக, துக்கத்தின் காலமாக நினைத்து வெளியடையாளங்களில் கவனத்தைச் செலுத்துகிறோம். தவ உடைகளை அணிவது, மாலை போடுவது, நோன்பு இருப்பது, புலால் உண்ணாமல் இருப்பது, மது அருந்தாமல் இருப்பது என்று, பல வெளிப்புறக் காரியங்களில் நாம் அதிக கவனம் செலுத்துகிறோம். மேற்சொன்னவை செய்யக்கூடாது என்று நான் சொல்லவில்லை. மாறாக தவக்காலம் என்பது அவற்றோடு முடிந்துவிடுவது அல்ல, அவற்றையும் கடந்து சில முக்கியமான காரியங்களில் நமது கவனம் போக வேண்டும்.

உறவுகளில் மாற்றம் வேண்டும், பகைமை, கோபம், அடுத்தவர்மீது கொண்டுள்ள வெறுப்பு, காழ்ப்புணர்ச்சி போன்றவற்றைக் களைய வேண்டிய காலம் தவக்காலம்.

- ஏழை, எளியவர்கள் மேல் பற்றும் பாசத்தையும் வெளிப்படுத்த வேண்டிய காலம் தவக்காலம்.
- நமது நேரத்தை செப வாழ்வில் செலவழிக்கும் காலம் தவக்காலம். குடும்ப ஜெபம், தனிப்பட்ட ஜெபம் போன்றவற்றை சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய காலம்.
- குடும்பம், சமூகம், திருஅவை போன்றவற்றிற்க்கு நாம் ஆற்றவேண்டிய கடமைகளை கவனத்திற்கு கொண்டு வரும் காலம் தவக்காலம்.
- கடந்த கால வாழ்க்கையில் செய்த தவறுகளை மாற்றிக்கொள்ள முயலும் காலம் தவக்காலம்.
- ஒவ்வொரு ஆண்டும் வருகிற தவக்காலமாய் இந்த ஆண்டும் தவக்காலத்தை கழித்துவிடாமல், நமது வாழ்க்கையை மாற்றிக் கொள்ள சில முயற்சிகளை எடுப்போம்.
- இம்மாதம் 8–ஆம் நாளை உலக பெண்கள் தினமாகக் கொண்டாடுகிறோம். பெண்களை இறைவனின் சாயல்களாகப் பார்ப்போம் . அவர்களுக்கு இருக்கும் நல்ல பண்புகளைப் போற்றுவோம். குடும்பத்திற்காக மேற்கொள்ளும் தியாகங்களுக்காக நன்றிசொல்வோம்.

இம்மாதம் அரசாங்க பொதுத்தேர்வை எழுதுகிற 10,11 மற்றும் 12 வகுப்பு மாணவர்களுக்காக ஜெபிப்போம். உங்களுடைய பிள்ளைகள் பொதுத் தேர்வை எழுதுகிறார்கள் என்றால் அவர்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தைரியத்தையும் கொடுங்கள். அவர்களைப் பயமுறுத்த வேண்டாம். உங்கள் உடனிருப்பால் அவர்கள் தங்களுடைய தேர்வுகளை நன்றாக எழுத உதவிசெய்யுங்கள்.

இந்த மாதம் முழுவதும் நீங்கள் மேற்கொள்ளவிருக்கிற அனைத்துப் பணிகளையும் முயற்சிகளையும் புனித அந்தோணியாரின் பரிந்துரையால் இறைவன் உங்களுக்கு வெற்றிகரமாக நிறைவேற்றியருள வேண்டிக் கொள்கிறேன்.

அன்புடன்
**G.காணிக்கைராஜ்**
திருத்தல அதிபர்



# புதுமைப் பெண் மரியா

அருட்பணி. அசோக் பிச்சைமுத்து
திருத்தல உதவி தந்தை

“வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது: பெண் ஒருவர் காணப்பட்டார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். நிலா அவருடைய காலடியில் இருந்தது. அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார்”

(தி.வெ.12:1)

அன்பிற்குரியவர்களே, நமது தாய் அன்னை மரியா காலம் தாண்டிய எடுத்துக்காட்டாய் சொல்லப்படுகின்ற ஒரு புதுமைப் பெண். அன்னை எல்லா அருள் வளங்களும் நிறை குணங்களும் நிறைந்த வீர மங்கையாக எல்லாவற்றிலும் தனது அருட்சுவடுகளைப் பதித்தவர். நம் தாய் மரியா எப்போதுமே தனது வாழ்வில் புதுமையை மூச்சுக் காற்றாய் சுவாசித்தார்.

மெசியாவின் தாயாக விளங்கிய மரியா மாட்சி பொருந்திய புதிய ஏவாளாக இருக்கிறார் என்ற உண்மையை திருவெளிப்பாடு நூல் தெளிவாக எடுத்துரைக்கிறது. கத்தோலிக்க பாரம்பரியத்தில் தொடக்க கால திருச்சபையின் தந்தையர்களின் கருத்துகளின் அடிப்படையில் திருவெளிப்பாடு நூலில் கூறப்படும் பெண் மரியாதான் என்று உறுதிபடக் கூறலாம். ஆக எல்லா காலகட்டத்திற்கும் தனது வாழ்வை சிறப்புகளால் அலங்கரித்தவர் நம் தாய் மரியா.

“ உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும் நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய் (தொ நூல் 3:15)

தம் மகனின் வல்லமையை, இறைவனின் பராமரிப்பை முற்றிலும் நம்பியிருந்த மரியாவின் துணிவையும், மனத்தெளிவையும் காணும்போது அன்னை மரியா நமக்கு எப்போதும் புதுமைப் பெண்ணாகத் தோன்றுகிறார்.

**மரியாவின் வாழ்வும் நமது எண்ணமும்:**

மரியாவின் பெற்றோர்கள் தங்களுக்கு மரியா பிறந்தது குறித்து மகிழ்ந்து கடவுளுக்கு நன்றி செலுத்தினர். மரியாவும் தனது பிறப்பில் மகிழ்ந்து ஆண்டவரைப் போற்றிப் புகழ்ந்தார்.

யோபு தனது பிறப்பு நாளைக் குறித்து வருந்தினார். தனது பிறந்த நாளைக் குறித்து சபிக்கத் தொடங்கினார் (யோபு 3:1–26) இன்று ஆணாகப் பிறந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று எண்ணுகிறவர்களும் இருக்கிறார்கள்.

உருவில் குறை கண்டு தமது பிறப்பை வெறுக்கக் கூடியவர்களாக இருக்கிறவர்கள் நமது மத்தியில் பலர் உள்ளனர். நம்மில் ஒரு சிலர் நமக்குத் திறமையில்லை என்றோ நாம் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்றோ எண்ணக்கூடியவர்கள் உண்டு.

ஆண்டவருடைய படைப்பில் ஒவ்வொரு மனிதனின் படைப்பு ஒரு நோக்கம் கொண்டதாக இருக்கிறது. நமது பிறப்பு நமக்கும் பிறருக்கும் அர்த்தத்தைக் கற்பிக்கின்றதா? என்னால் எத்தனை பேர் பயனடைகிறார்கள்? என்று சிந்திப்பது மிகத் தேவையான ஒன்றாக இருக்கிறது. ஒவ்வொரு படைப்பும் இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் தாங்கி இவ்வுலகில் இருக்கிறது. ஒவ்வொரு வாழ்வின் நோக்கமும் ஒவ்வொரு மானிடனுக்கும் இருக்கிறது.

அன்னை மரியாவைப் போன்று நாமும் நமது வாழ்வின் நோக்கத்தை எதிர்நோக்கி பயணப்படுவோம். அன்னை நம் வாழ்வின் ஆதாரமாக இருக்கிறார்.



# முயற்ச்சி செய் உன்னால் முடியும் வரை

அருட்பணி. ஜேசு
திருத்தல உதவித் தந்தை

இமயத்தை, எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தவனின், உச்சத்தை தொட்டவனின் வரிகள், “ ஓ இமயமே, உன்னால் இதற்கு மேல் உயர்ந்து வளர முடியாது. ஆனால், நான் உன்னைவிட பல உயரங்களை தாண்டிச் செல்வேன்.” எத்தகைய தன்னம்பிக்கை கொண்ட வார்த்தைகள் இவை. இமயத்தின் உச்சத்தை தொடுவதற்கு முன்பு எத்தனை சறுக்கல்களை சந்தித்திருப்பானென்று தெரியவில்லை. சிகரம் தொட்டதும் அது அவனுக்கு உணர்த்திய செய்தி, அவனால் இன்னும் உயர்வாகச் செல்ல முடியும் என்பதே. இறக்கைகள் விரித்து மேலேழும்ப நினைக்காத வரை வானம் தூரம்தான்; தொட முடியாது என்கிற எண்ணம், தொடக்கமே (துவக்கமே) இல்லாமல் முடக்கிவிடும். முயற்சி செய்யவில்லை என்றால் முடியாதவர் **(Impotent)** ஆகிவிடுவோம். முடியாதவராக ஒன்றுமே இயலாதவராக இறைவன் எவரையும் படைக்கவில்லை. இவ்வுலகில் இன்று நாம் காணும் எத்தனையோ மாற்றங்களும் வளர்ச்சியும் தனி மனித அல்லது கூட்டு முயற்சியினால் விளைந்தவையே. கருவை விட்டு வெளிவர முயற்சி செய்யாத எந்த உயிருக்கும், கருவறையே கல்லறையாகிவிடும். (சில விதிவிலக்குகள் உண்டு. கருக்கலைப்பு, சிசுக் கொலை– மனமில்லாதவர்கள் செய்வது)

உயிர் உலகத்திற்கு வருவது முயற்சியின் பயனால்தான். தொடர் முயற்சியே பெரிய வெற்றிகளைக் கொடுக்கிறது. வீழ்ந்தாலும் சிகரத்தை அடைந்தவன் போல், எழுந்து முன்னேறிச் சென்றால்தான், ‘முயற்சி திருவினையாகும், முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்.’ நம்மில் சிலர் புழுக்கள் போல சிறிது நெளிந்துவிட்டு ‘முயற்சி செய்தேன் முடியவில்லை’ என்று வெயிலில் புழு மடிவது போல, வேதனையில் மடிந்து போகிறோம்.

இளைய சகோதரனே, சகோதரியே இன்று உங்களுக்கிருக்கும் சில வசதிகள், சில ஐம்பது (50) அல்லது நூறு (100) ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த நம் முன்னோர்களுக்கு இருந்திருந்தால், எத்தனையோ விசித்திரமான விசயங்களை செய்திருப்பார்கள். அவர்கள் கண்டு பிடிக்காமல், உருவாக்காமல் சென்றவை அனைத்தும் நமக்கு கிடைத்த வாய்ப்பு. வாய்ப்புகளைக் கண்டுபிடித்து நமதாக்கிக்கொள்வது நம் கையில் இருக்கிறது. முடமாக்கும் சில சிற்றின்ப ஆசைகளில் நாம் அந்த வாய்ப்புகளைத் தேடினால் கிடைக்காது. அந்த ஆசைகள் நம்மை ஏமாற்றுமே ஒழிய, ஏற்றம் தராது.

படிக்காதவர்களும் மேதையாகி இருக்கிறார்கள், பயிற்சியினாலும் முயற்சியினாலும். காசு இல்லாதவர்களும் பலருடைய கவனத்தில் பதிந்திருக்கிறார்கள் பயிற்சியினாலும், முயற்சியினாலும். உண்ண உணவில்லாதவர்களும் இந்த உலகத்தை புரட்டியிருக்கிறார்கள். கண் தெரியாதவர்களும், காணக்கூடியவர்கள் செய்ய முடியாததை சாதித்திருக்கிறார்கள்.

**ஹெலன் கெல்லர்:** கண் தெரியாதவர், காது கேளாதவர். அவருடைய வாழ்க்கை சரிதம் பலரின் ஊக்கமாக இருக்கிறது.

**ஸ்டீவ் வொண்டர்:** பிறந்த சில நாட்களில் பார்வை இழந்தவர் இசையில் சாதித்தார்.

**லூயிஸ் பிரெய்ல்:** பார்வையற்றவர்கள் தொட்டுணர்ந்து எழுத வாசிக்கக் கூடிய எழுத்துக்களை உருவாக்கியவர்.

**ரே சார்லஸ்:** இசையினால் பல்வேறு நிலையில் இருப்பவர்களுக்கு ஊக்க மூட்டி வந்தவர்.

**டேவிட் பேட்டர்சன் :** அமெரிக்காவின், இரண்டாவது கண் பார்வையற்ற ஆளுநர்.

**சுதா சந்திரன்:** விபத்தில் காலை இழந்த இவர் பரதநாட்டியம் என்னும் கலையை வாழ வைக்கிறார் தன் முயற்சியால்.

**மர்லா ருன்யான்:** அமெரிக்க தடகள வீராங்கனை பார்வையற்றவர் – 5000 மீட்டர் ஓட்டத்தில் மூன்று முறை தங்கம் வென்றவர்.

**அருநிமா சின்ஹா:** சில திருடர்கள் இவரை தொடர் வண்டியிலிருந்து வெளியே தூக்கி வீச மற்றொரு தொடர் வண்டியில் அடிபட்டு கால் இழந்தவர். எவரெஸ்ட் சிகரத்தில் தன் தடம் பதித்து கொடி நாட்டியவர்.

குறைகள் இல்லாமல் , குறை சொல்லாமல் நாமும் இல்லை, இந்த உலகமும் இல்லை. குறைகள் எல்லா இடத்திலும் இருக்கத்தான் செய்கின்றன. அதனால் வெறுப்படைபவன் கண்ணில், கருத்தில் உலகம் வெறுமையாய் தோன்றுகிறது. மாற்றிட மாறிட விரும்புபவர் எண்ணத்தில், செயலில் குறைகளும் சரித்திரமாய் மாறுகிறது. குறையை எண்ணி வருந்துகிறவர்கள் வறுமையில் சிக்கிக்கொள்கின்றனர். அதை உடைத்து எழுபவர்கள் உலகை திரும்பிப்பார்க்க செய்கின்றனர்.

*முயற்சி செய்*

*உன்னால் முடியும் வரை*

*– உன்னை வெல்ல யாருண்டு..*



# ஞாயிறு மறையுரைகள்

## பொதுக்காலம் 8 – ம் ஞாயிறு

### சீராக் 27: 4-7; 1 கொரி 6 : 39 - 45; லூக்கா 6 : 39 - 45

### உள்ளத்தின் ஒளியும் வாழ்வின் கனியும்

அருள் முனைவர்.
அந்தோணி ஜோசப்



நாம் அனைவரும் பிறரை ஆசீர்வாதமிக்கவர்களாக காண இறைவன் இன்றைய நற்செய்தியில் அழைப்பு விடுக்கின்றார். மனிதர்களின் பார்வைகளும், முற்சார்பு எண்ணங்களும் பலவிதமாக அமைந்துள்ளது. பிறரை காண்கின்ற பார்வைகள் பழுதானால், ஒருசார்பு எண்ணங்களாய் அமைந்தால் நமது உறவுகள் பாழாய்ப் போகும். நாம் காண்கின்ற பார்வைகள் ஒளியால் உறவுகள் உயிர்பெறும், வாழ்வு வளம் பெறும். என் பார்வையில், உள்ளத்தில் இறை ஒளி நிறைந்திருக்கும் பொழுது என் கண்முன் நிற்பவர்கள் கடவுளின் சாயலாய் தோன்றுவார்கள்.

**தன்நிலை அறிதலும் - பிறர் நிலை புரிதலும்**

என் நிலையை அறியாமல், என் இயலாமையை, குறைகளை அறிந்து ஏற்றுகொள்ளாமல் தன்னை அன்பு செய்யாமல், பிறரை அன்பு செய்வதும் குறைகளோடு ஏற்றுக்கொள்வதும் இயலாத காரியம். தன்னை அன்பு செய்ய இயலாத ஒருவரால் பிறரின் நன்மைத்தனத்தை காண இயலாது. பிறரின் குறைகளை மட்டுமே காண முடியும். இன்றைய நற்செய்தியில் இறைமகன் இயேசு தன் மிகுதியான குறைகளை பலவீனங்களை அறிந்தும் அவற்றை ஏற்றுக் கொள்ளாமல் பிறரின் சிறிய தவறுகளை பலவீனங்களை மிகுதிப்படுத்தி அவற்றின் வழியாக தன் மிகப்பெரும் தவறுகளை மறைக்கும் மனிதர்களின் மனநிலையைச் சாடுகின்றார். பிறரின் சிறிய சிறிய தவறுகள் பலவீனங்கள் குறைபாடுகள் இவற்றில் நமது கவனத்தை திருப்பி தன் நிலை அறியாமல் வாழ்வது மதியீனம் . அத்தகைய வாழ்வு கிறிஸ்தவ பண்பாட்டிற்கு

எதிரானது. தன் தவறுகளை நியாயப்படுத்தி பிறரின் சிறிய தவறுகளை மிகைப்படுத்தி வாழும் பாதையை நாம் கைவிட்டு தன் நிலை அறிந்து பிறர் நிலை புரிதல் நம் வாழ்வை ஒளிமயமாக்கும்.

இன்றைய நற்செய்தியில் 'பார்த்தல்' மற்றும் 'கவனித்தல்' ஆகிய இரண்டு வார்த்தைகளை இயேசு பயன்படுத்துகின்றார். தன்னைப்பற்றி அளவிடும் போது குறைகளை கணக்கிடும்பொழுது சாதாரணமான அசட்டுத் தனமான பார்வையும் பிறரின் சிறிய துரும்பாய் இருக்கும் சிறிய தவறுகளை கூர்ந்து பார்த்தலும் சீடத்துவத்தின் பார்வை அல்ல. நமது வாழ்வில பிறரின் குற்றங்களை குறைகளை தவறுகளை அலசி ஆராய்ந்து ஊதி பெரிதாக்கி மகிழ்ச்சி காணும், மனமாய் அமைகின்ற செயல்கள் கவலைக்குரியது. தீமையாய், குறையாய், தவறுகளாய் இருக்கும் நமது வாழ்வின் மரக்கட்டைகளை முதலில் நீக்கிவிட்டு பிறரை சரிசெய்யும் மனமுதிர்ச்சிக்கு கடந்து செல்வோம் . வீழ்ச்சியான பார்வையும் தீய பார்வையும் எதிர்மறை எண்ணங்கள் கொண்ட பார்வையும் தீமையையும் இருளையும் வெறுப்பையும் உமிழும்.

**சீடத்துவத்தின் பார்வை - ஆசீர் வழங்கும் பார்வை**



இயேசுவின் பார்வை தான் சந்தித்த அனைவரையும் இறைவனின் அன்பு பிள்ளைகளாகக் கண்டது . வாழ்வில் தடம் புரண்டு சென்ற பலரையும் இறைவனின் இரக்கத்தை உணர்ந்து அனுபவிக்கத் தூண்டியது. சக்கேயுவின் பண ஆசையை பிறருக்கு உதவும் கரங்களாக இயேசுவின் பார்வை மாற்றியது. பாவியான பெண்ணின் வாழ்வை இயேசுவின் அணுகுமுறை தூய வாழ்விற்கு இட்டுச்சென்றது. வரி வசூல் செய்த மத்தேயுவை அவை அனைத்தையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்ற இயேசுவின் கனிவு மிகுந்த பார்வை கவர்ந்திழுத்தது. மும்முறை மறுதலித்த பேதுருவை இயேசுவின் உடனிருப்பும் புரிதல் மிகுந்த வார்த்தைகளும் தலைமைத்துவ பணிக்கு அவரை உயர்த்தியது. இயேசு இவர்களின் வாழ்வில் நன்மையானவற்றை மட்டுமே கண்டார். இயேசுவின் அணுகுமுறையும் இரக்கம் நிறைந்த சொற்களும் கனிவான பார்வையும் நீங்கள் கடவுளின் பிள்ளைகள் என்னும் உணர்வை வழங்கியது. சீடத்துவத்தின் பார்வை ஒளி மிகுந்த பார்வை. ஒளி மிகுந்த கண்களால் வாழ்வின் செயல்பாடுகள் ஒளிபெறும். ஏனென்றால் கண்தான் ஒருவரின் வாழ்வின் விளக்கு (மத் 6 :22). சீடத்துவத்தின் இதயத்திலிருந்துதான் அனைத்து செயல்பாடுகளும் வருகின்றன. சீடத்துவத்தின் இதய களஞ்சியத்தில் நன்மையானவற்றை மட்டுமே சேகரிக்க

கற்றுகொள்வோம் . இதயமே நமது எண்ணங்களின் களஞ்சியம் . இக்களஞ்சியத்தில் இருந்து தான் நமது செயல்பாடுகள் வெளிஉலகிற்கு வெளிப்படுகின்றது. நமது உள்ளத்தில் நமது சகோதரர் சகோதரிகளைப் பற்றிய ஆசீர் மிகுந்த நினைவுகளை பிறரின் உதவிகளை உடனிருப்பை அன்புச் செயல்களை மகிழ்ந்து கழித்த தருணங்களை சேகரிப்போம் பாதுகாப்போம். அப்பொழுது நமது சகோதர சகோதரிகள் நம் கண்முன் அழகாகவும் நமது ஆனந்தமாகவும் கடவுளின் சாயலாகவும் தோன்றுவார்கள். ஆசியாய் தென்படுவார்கள்.

### பலன்தரும் கனிமரமாய் வாழ்வோம்

வேரூன்றி, விருட்சமாய் வளர்கின்ற மரம் இயற்கை நெறியின்படி தன்னை சுற்றியிருக்கின்ற அனைவருக்கும் நிழலையும் தூய காற்றையும், கனியையும், தங்குவதற்கான இருப்பிடத்தையும் வழங்குகிறது. பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் புகலிடமாய் அமைகின்றது. கனியை வழங்கி உணவாகின்றது. தனது இருப்பினால் தன்னைச் சுற்றி இருக்கும் இடத்தை பசுமையாய் மாற்றுகிறது.

இறைவன் குறையில்லா மரத்தினை அவரின் சிங்கார வனத்தில் தேடுவதில்லை. எல்லா மரங்களிலும் ஏதோ ஒரு குறைபாடு உண்டு. உயரத்திலும் பருமனிலும் வளர்ச்சியிலும் வேறுபாடுகளும் குறைபாடுகளும் இறைவனின் பார்வையில் பெரிதாக்கப்படுவதில்லை. இறைவன் தேடுவதெல்லாம் கனிதரும் மரங்களாய் வளர்ச்சி பெறுவதே. உண்மையான சீடத்துவ வாழ்வில் இறைவன் நம் குறைகளை பலவீனங்களை இயலாமையை இவற்றையெல்லாம் மிகுதிப்படுத்தாமல் நாம் இறைவார்த்தையை ஏற்று பிறருக்கு வாழ்வையும் மகிழ்வையும் நேர்மறை சிந்தனைகளையும் வழங்குபவர்களாய் உருவாகிட விரும்புகிறார். நமது இதயத்தின் கருவூலத் திலிருந்து நன்மையானவை மட்டுமே கனிகளாக வெளிப்பட உற்சாகப்படுத்துகின்றார். சீடத்துவ வாழ்வு தன்னை சுற்றி இருப்பவர்களை குறிப்பாக கடைநிலையினரை வாழவைப்பதே, என்பதை உணர்வோம் அதனை செயல்படுத்துவோம்.




# தவக்காலம் முதல் ஞாயிறு

09.03.2025

## இணைச்சட்டம் 26:4 - 10; உரோ 10:8 - 13; லூக் 4: 1 - 13

### எதை தேர்ந்தெடுப்பது? வாழ்வையா சாவையா?
### நன்மையா - தீமையா?



தவக்காலத்தின் முதல் ஞாயிறு – ஒவ்வொரு ஆண்டும் இயேசு சந்தித்த சோதனைகளை நாம் சிந்திக்க தாய் திருஅவை நமக்கு அழைப்பைத் தருகின்றது. இயேசு நம்மைப்போன்று மனித உருவில் தோன்றி, மனுவுடல் ஏற்று உண்மையான மனிதரின் வாழ்வில் ஏற்படும் எல்லாச் சூழ்நிலைகளிலும் அவர் பங்கெடுத்தார் என்பதை இயேசு சோதிக்கப்பட்ட நிகழ்வு உணர்த்துகின்றது. எபிரே 4:15 இதற்கு சான்று பகர்கின்றது. இயேசு அலகையினால் சோதிக்கப்பட்ட நிகழ்வு இயேசுவின் மனுவுடல் ஏற்பில் அவர் முழுமனிதனாக வாழ்ந்தார் என்பதை உறுதிப்படுத்துவதாக புனித அகுஸ்தினார் குறிப்பிடுகின்றார்.

**சோதனைகள் - இரண்டுவிதமான 'அன்பிற்கான' - 'நிலைப்பாட்டிற்கான' மோதல்**

சோதனைகள் ஏற்படும் பொழுது நம் எல்லோருக்கும் ஏற்படும் குழப்பம் எதை தேர்ந்தெடுப்பது. இறைவனின் அன்பையா? அல்லது அலகையின் கவர்ச்சியான அறிவிப்புகளையா? அலகையின் கவர்ந்திழுக்கும் வார்த்தைகளையா? வாழ்வுதரும் இறைவார்த்தையையா? இறைத்தந்தை நமக்கு வழங்கும் பிள்ளைகளுக்குரிய சுதந்திரத்தையா? அல்லது அலகைக்கு அடிமையாய் வாழும் வாழ்வினையா? இந்த மோதலில் யாருக்கு நாம் அதிகம் செவிமடுக்கின்றோமோ அவர்களே வெல்கின்றார்கள். இன்றைய நற்செய்தியில் முழு மனிதனாய் இவ்வுலகில் வாழ்ந்த இயேசுவிற்கு நிகழ்ந்த சோதனைகளில் அவரின் தேர்ந்தெடுத்தலும் நிலைப்பாடும் மிகத் தெளிவாக நற்செய்தியில் விளக்கப்படுகின்றது. அலகையின் கவர்ச்சிகரமான கவர்ந்திழுக்கும் அறிவிப்புக்களுக்கும் அதிகார ஆசனத்திற்கும் செவிமடுக்காமல் இறைத்தந்தைக்கும்

இறைவார்த்தைக்கும் செவிமடுத்தலே சோதனையை வெல்லும் வழியாக இயேசு நமக்கு கற்பிக்கின்றார். சோதனையை கண்டு ஓடாதே? இவ்வுலகில் சோதனைகள் உண்டு. அவற்றை எதிர்கொண்டு அவற்றை கடந்து செல்ல இறைப்பிரசன்னமும்–இறைவார்த்தையும் ஊன்றுகோலாய் உதவும் என இயேசு தனது செயல்பாட்டினால் கற்பிக்கின்றார்.

### இறைவனை சோதிக்கும் நமது செயல்பாடுகள்

இறைவனை நோக்கி நமது பல கோரிக்கைகளும் பரிந்துரைகளும் அவரை சோதிப்பதற்காகவே அமைகின்றது. இறைவா என்னை செல்வந்தனாக மாற்றுங்கள், இறைவா என்னை அதிகாரத்தின் ஆசனத்தில் அமரவையுங்கள், என்னுடைய எல்லா பிரச்சனைகளையும் தீர்த்துவையுங்கள், உம்முடைய தூதர்களை அனுப்பி என் கால்கள் கல்லில் மோதாதபடி பார்த்துக்கொள்ளுங்கள் என நாம் வேண்டுகின்ற செயல்பாடுகள் இறைவனை சோதிப்பதாகவே அமைகின்றன. புதுமைகளை செய்யும் இறைவனை தேடுவதும்; அருளைத் தரும் ATMக்காக அவரை பார்ப்பதும் வேண்டுவதும், எனக்கு பதிலாக செயலாற்றும் மாற்று ஆளாக பதில் ஆளாக இறைவனை நினைப்பதும் உண்மையான ஆழமான விசுவாச வாழ்வு அல்ல என இயேசுவின் செயல்பாடுகள் நமக்கு விழிப்புணர்வை வழங்குகின்றன. என் சோதனை வேளையில் உடனிருக்கும் இறைவனைத் தேடுவதும் நான் கேட்டு உள்வாங்கிய இறைவார்த்தையை சிந்திப்பதும் என் வாழ்வின் நிலைப்பாட்டை வெளிச்சமாக்கும்.

### இவ்வுலகை வென்றெடுக்க புதுமைகள் அல்ல சிலுவையே அவசியம்

புதுமைகள் கொண்டே நமது விசுவாச வாழ்வை நகர்த்துவது ஆழமான நம்பிக்கைக்கு வழிவகுப்பதில்லை. புதுமையை தேடுகின்ற நம்பிக்கையாளர்கள் இறைவனை விரும்பித் தேடுவதில்லை. அவர்களின் சுயநலத்தை விருப்பத்தை தேடுகின்றார்கள். நமது நம்பிக்கை வாழ்வு புதுமைகளால் மட்டுமே நிரம்பியிருக்க வேண்டும் என விரும்புவது நமது நம்பிக்கையை விமர்சனத்திற்கும் கேள்விக்கும் உள்ளாக்குகின்றது. அலகை இறைமகன் இயேசுவின் மீட்பு திட்டத்தின் தொடக்க நாட்களில் பாலைவனத்தில் தனித்திருக்கும்பொழுது மூளைச்சலவை செய்ய முற்படுகின்றான். இவ்வுலகை மாபெரும் புதுமைகள் கொண்டு மீட்டெடுக்க முடியும், அனைவரையும் அவரின் பக்கம் கவர்ந்திழுக்க முடியும், அவரை அனைவரும் சிம்மாசனத்தில் அமர்த்தி கொண்டாட முடியும், அனைத்து அதிகாரம் கொண்ட மனிதராக மக்களின் வீடுகளில் வலம் வர முடியும், என பல கவர்ச்சிகரமான வழிமுறைகளை உத்திகளைப் பரிந்துரைக்கின்றான்.

இயேசு தன் வாழ்வை, இறையரசின் வழிமுறையே சிலுவையின் வழியே மீட்பு என்பதை ஆழமாய் உணர்ந்து அலகையின் வழிமுறைகளைப புறக்கணிக்கின்றார். இவ்வுலகினை அலகையின் அதிகாரமிக்க புதுமைமிக்க வழிமுறையினால் இறை அன்பின் வளையத்திற்குள் கொணர இயலாது என்னும் நிலைப்பாட்டில் உறுதியாய் நின்று, தனது சிலுவையினால் மட்டும் மீட்பைக்கொணர முடியும் என உறுதியாய் நம்புகின்றார். அப்பங்களாக மாறும் கற்களும், அடிபணிய வைக்கும் அதிகாரமும், புதுமைகள் செய்யும் மாயவித்தைகளும் இயேசுவின் மீட்புப்பணியில் துளியும் இடம் பெறுவதில்லை. தந்தைக்கு செவிமடுத்து அனைவரையும் சுதந்திரமான மனிதர்களாக மாண்போடும் மகிழ்வோடும் மனநிறைவோடும் செயல்பட வைப்பதே தனது பணி என உணர்கின்றார்.

**மூன்று சோதனைகள் 1) நானும் - பொருட்களும் 2) நானும் - இறைவனும் 3) நானும் - சக மனிதர்களும்**

இன்றைய நற்செய்தியில் வழங்கப்பட்டிருக்கும் மூன்று சோதனைகள் நமது அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் சோதனைகளைப் போன்றே அமைந்திருக்கின்றது.

**(1) நானும் நான் பயன்படுத்தும் பொருட்களும்**

பொருட்களைப் பெறுவதற்காக அவற்றை இன்னும் அதிகமாக சேர்த்துக் கொள்வதற்காக எனது அதிகாரத்தை பதவியை மதிப்பை ஆளுமையைப் பயன்படுத்துவது பாவம் என நற்செய்தி உணர்த்துகின்றது. நீர் இறைமகன் என்றால் இந்தக் கல்லை அப்பமாகும் படி கட்டளையிடும் என அலகை சோதித்த பொழுது, இயேசு பசியுற்றிருந்தாலும் தனது சுய விருப்பத்திற்காக அவற்றை அப்பமாக மாற்றவில்லை. ஆனால் மக்கள் பசியுற்றிருந்த பொழுது இறைத்தந்தையிடம் வேண்டி அப்பங்களை பலுகச்செய்தார். நமக்கு உணவு அவசியமானது. ஆனால், நான் வாழ்வதற்காக அதிகாரத்தையும் ஆசனத்தையும் பயன்படுத்துவது தவறு. கடவுளின் வார்த்தை நமக்கு வாழ்வளிக்கும் .

**2) நானும் இறைவனும்**

உன்னையும் உன் ஆன்மிகத்தையும் இறைமக்களுக்குரிய சுதந்திரத்தையும் விசுவாச நிலைப்பாட்டினையும் அலகைக்கு விற்றுவிட இரண்டாவது சோதனை அழுத்தம் தருகின்றது. நமது வாழ்வை மதிப்பீடுகளின் பண்ட மாற்றம் முறைக்கு அலகை இழுக்கின்றது. நான் உனக்கு இவ்வுலகைத் தருகின்றேன் என்னை வணங்கு என்னும் நிபந்தனையை விதிக்கின்றது. வணிகமாக்கப்படும் மதிப்பீடுகளை திறமைகளை அது கற்றுத்தருகின்றது. நம் இறைத்தந்தை நம்மை சுதந்திரமான மக்களாக வாழ்ந்திட இத்தவக்காலத்தில் அழைப்பை தருகின்றார். அவரின் அன்பு நிபந்தனையற்றது. தன்னை முழுமையாக தருவதே இறைவனின் அன்பு. எதையும் மாற்றாக எதிர்பாராத அன்பு. எதற்கும் நாம் அடிமையாகாதபடி அவரின் அன்புப் பிள்ளையாக எச்சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளும் அன்பாக அவரின் அன்பு அமைகின்றது. எல்லாப் புகழும் மகிமையும் அதிகாரமும் மாட்சியும் எனக்கு மட்டுமே என எண்ணுவது அலகையின் சோதனை. ஆனால் எல்லாப் புகழும் மகிமையும் மாட்சியும் இறைவனுக்கு என்பது இயேசுவின் மனநிலை. வணிகமாக்கும் ஆன்மிகமும் அன்றாட உறவுகளும் மாறுவதே சிறந்த மனமாற்றம்.

**3) நானும் - சக மனிதர்களும்**

எல்லா மனிதர்களும் எனக்கு பணிவிடை செய்ய வேண்டும் என எண்ணுவதும் அதற்காக முனைவதும் நமது அன்றாட சோதனையில் அடங்கும். மக்கள் உன்பக்கம் நிற்க வேண்டுமென்றால் உனக்கு அதிகாரம் வேண்டும் உனக்கு பொருட்கள் வேண்டும் என அலகை சோதிக்கின்றது. பிறர்க்கு நாம் பணிவிடை செய்வது மகத்தானது அதுவே உயர்ந்தது என்பதை இயேசுவின் பாதம் கழுவும் நிகழ்வும் தான் பணிவிடை பெற அல்ல பணிவிடை புரியவே வந்தேன் (மாற் 10:45) என்பதை இயேசுவின் மூன்றாம் சோதனையின் வெற்றி உணர்த்துகின்றது.

நமது அன்றாட சோதனை தவிர்க்க இயலாதது. அவற்றினை கடந்து செல்வோம் . அவையே நமது நம்பிக்கை வாழ்வை இன்னும் உறுதியாய் வாழ்ந்திட நமக்கு கற்பிக்கும். இறைத்தந்தையும் இறைவார்த்தையும் நமக்குத் துணையாய் என்றும் துணையாய், உண்டு.

# தவக்காலம் இரண்டாம் ஞாயிறு

16.03.2025

## தொடக்க நூல் 15: 5 - 12, 17-18 பிலி 3 : 17-41, லூக்கா 9 : 28-36

## ‘நான் எதை அதிகமாக நேசிக்கின்றேனோ, அதுவாகவே உருமாற்றம் அடைகின்றேன்’



இயேசுவின் தோற்றம் மாறும் நிகழ்வினை தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு அன்று சிந்திக்கின்றோம் . இயேசு தனது சாவினைப்பற்றி முதல் முறையாக அறிவித்த பிறகு சிலுவையின் வழியே மீட்பு என்பதை சீடர்களுக்கு உணர்த்தி உரையாடி எட்டு நாட்கள் கழிந்த பிறகு, இயேசு மூன்று சீடர்களை பேதுரு யோவான் யாக்கோபை அழைத்துக்கொண்டு மலைக்குச் சென்று ஜெபித்தபொழுது தோற்ற மாற்றம் அடைந்தார்.

**நான் எதை நேசிக்கின்றேன் எத்தகைய தோற்றம் மாற்ற அடைய விரும்புகின்றேன் ?**

நம்முடைய கிறிஸ்தவ வாழ்வின் அருளின் காலமாக அமைவது தவக்காலம். நாம் அனைவருமே இவ்வழிபாட்டு காலத்தில் மாற்றத்தை விரும்பியே பயணிக்கின்றோம். உணவினில் மாற்றம் உடையினில் மாற்றம், ஒப்பனையில் மாற்றம் பொழுதுபோக்கு நேரங்களில் மாற்றம் தேவாலயங்களில் சந்திப்பதில் உள்ள காலத்தில் மாற்றம் இயேசுவின் பாடுகளை சிந்திப்பதில் அதிகமான நேரம் ஒதுக்கும் விருப்ப மாற்றம் என பட்டியல் நீளுகின்றது. இயேசு மலையேறிச் சென்று ஜெபித்தபொழுது தோற்ற மாற்றம் அடைந்தார். நான் எத்தகைய செயலினை மீண்டும் மீண்டும் செய்கின்றேனோ எந்த மனிதருக்கு அதிகமாக செவிமடுக்கின்றேனோ அவர்களின் தாக்கங்களே என்னை மாற்றம் அடையச் செய்கின்றன. ஜெபத்தில் அதிக ஈடுபாடு உள்ளவர்கள் ஜெப மனிதர்களாக மாறுகின்றார்கள். தியானத்தில் அதிக ஈடுபாடு உள்ளவர்கள் தியான சிந்தனை உடையவர்களாக மாறுகின்றார்கள். உரையாடலில் அதிக ஈடுபாடு உள்ளவர்கள் உரையாடி உறவை வளர்க்கும் மனிதர்களாக மாறுகின்றார்கள். செவிமடுப்பதில் அதிக ஈடுபாடு உள்ளவர்கள் பிறரின் குறைகளுக்கு செவிமடுத்து உடன்பயணிக்கும் தோழர்களாக மாறுகின்றார்கள்.

அத்தகைய மாற்றங்கள் ஒற்றை நிகழ்வுகளால் உருவாவதில்லை. மாறாக அது ஓர் தொடர் பயணம், தொடர் நிகழ்வு தொடர் அனுபவம். படிமுறை செயல்பாடுகளின் விளைவாக உருவாவதே அத்தகைய மாற்றம். செல்போன் மோகத்திலும் தகவல் தொடர்பு சாதனங்களிலும் அவற்றின் சமீபத்திய செயல்களிலும் அதிக நேரம் செலவிடுவோரின் எண்ணங்களும் உரையாடல்களும் மனநிலையும் ஒரு சிலரை அத்தகைய சிந்தனைக்குள் சிறைப்பிடிப்பதும் சீரழிக்கும் மாற்றங்களாக அமைவதையும் நாம் அறிவோம் .

### செவிமடுத்தலே - தோற்ற மாற்றம்

செவிமடுத்தல் அழகானது, ஆற்றல் மிக்கது, குணப்படுத்துவது, மனமாற்றம் அடையச் செய்வது. நமது திருஅவை இப்பொழுது கொண்டாடி நிறைவு செய்திருக்கும் உலக ஆயர்களின் மாமன்றத்தின் மைய நாடியே செவிமடுக்கும் திருஅவையாக மாற்றம் பெறுவதே. கூட்டு ஒருங்கிய திருஅவையின் செயல்பாடுகளாக திருத்தந்தை பிரான்சிஸ் முன்வைக்கும் கருப்பொருள் செவிமடுங்கள். இயேசு தனது இறையரசு பயணத்தில் தனது தந்தைக்கு செவிமடுக்கும் மகனாக செயல்பட்டார். சரியானவற்றை தேர்வு செய்வதிலும் துன்பத்திலும் கலக்கத்திலும் தனித்து விடப்பட்ட சூழலிலும் இறைத்தந்தைக்கு செவிமடுத்து செயல்பட்டார். அவர் இறைத்தந்தையின் வழிமுறைகளை / திட்டத்தினை தேர்ந்து தெளிந்தபோது தோற்ற மாற்றம் பெறுகின்றார் . இறைவனுக்கு செவிமடுப்பதில் அதிக நேரங்களை செலவிட்டதால் இயேசுவின் அகம் ஒளிர்ந்தது. அகமாற்றம் ஒளிபெற்று அது புறமாற்றத்திற்கு வித்திடுகின்றது . அக ஒளி புற ஒளியாக வெளிப்படுகின்றது. என் அகம் ஒளிர செவிமடுத்தல் அவசியம் என நற் செய்தி எனக்கு உணர்த்துகின்றது.

### பரவசங்களை மட்டும் காண்பதல்ல கிறிஸ்தவ வாழ்வு

பேதுரு இயேசுவின் தோற்ற மாற்றத்தைக் கண்டு பரவசநிலையில் மூழ்கி அங்கேயே தங்கிட விரும்புகின்றார் . மலையிலிருந்து இறங்கி வர அவர் விரும்பவில்லை பரவச காட்சிகளும் அக்காட்சியை காண்பதற்காக காத்திருத்தலும் கிறிஸ்தவ வாழ்வு அல்ல. இயேசு மூன்று சீடர்களுடன் மறுநாள் மலையிலிருந்து இறங்கி வந்து நோய்களுடன் வாழ்ந்த மக்களை அவர்களின் துன்பங்களை காண அழைத்துச் செல்கின்றார். பிரகாசமாய் ஒளிர்ந்த இயேசுவின் முகமும் உடலும் மக்களின் வேதனைகளில் துன்பங்களில் அவர்களுடனான உடனிருப்பில் சந்திக்கின்றது. கடவுள் தனக்கு வழங்கிய அக அழகை அன்பினை உடனிருப்பினை தனது சகோதர சகோதரிகளுக்கு வழங்கிட எத்தனிக்கின்றது. நமது உள்ளமும் முகமும் பரவச அனுபவங்களில் / மலை அனுபவங்களில் மட்டும் ஒளிர்ந்தால் மட்டுமே போதுமானது அல்ல. மாறாக உண்மையான அன்புடனும் கரிசனையுடனும் வேதனையில் இருப்பவர்கள் விளிம்புநிலையில் இருப்பவர்கள் மத்தியில் பிரகாசமாய் ஒளிர வேண்டும். உளமாற்றம் பிறருக்கு வாழ்வை வழங்கும் மாற்றமாக உருவாக வேண்டும். நாம் ஜெபிப்பதும் மலை ஏறிச் செல்லுவதும் காட்சிகளையோ பரவசங்களையோ பெறுவதற்காக அல்ல. மாறாக இறைவனுக்கு செவிமடுப்பதற்காகவே என நாம் உணர வேண்டும் .

### சிலுவையும் தோற்ற மாற்றமும்

இறைமகன் இயேசுவின் மீட்பு பயணத்தில் உச்சகட்டம் அவரின் உருமாற்றத்தில் அடங்கிவிடவில்லை. மாறாக மகிமை பெறும் அவரது சிலுவையில் அடங்கியுள்ளது. மீட்பின் மறைப்பொருள் மகிமைபெறும் தோற்ற மாற்றத்தில் அல்ல, மாறாக துன்பத்தில் உடனிருக்கும் அன்பில் நிறைந்துள்ளது. இயேசுவின் பிரகாசமான தோற்ற மாற்றமும் ஒளிர்ந்த அவரது முகமும் துன்பங்களை ஏற்று சிலுவைச்சாவு வரை கீழ்ப படிந்த / செவிமடுத்த (பிலி 2 : 6–11) அவரின் தூய அன்பில் வெளிப்படுகின்றது. இயேசுவின் மகிமையான வாழ்வை பிரதிபலிக்க நாம் அவருக்கு செவிமடுக்க வேண்டும். அன்பு அறநெறியை, பணிவிடை செய்யும் தலைமைத்துவத்தை செவிமடுக்கும் தோழமையை வெளிப்படுத்தும் தருணங்களில் நமது முகமும் வாழ்வும் நம்சமூகத்தில் ஒளிரும்.



23.03.2025

# தவக்காலம் மூன்றாம் ஞாயிறு

## வி.ப 3:18 1கொரி 10:161012 லூக் 13: 1 9

### “ மனிதர்களின் மனமாற்றத்திற்காக வேண்டுகின்ற (கடவுள்)”



மனிதர்கள் கடவுளை நோக்கி வேண்டுகின்ற செபங்களை செயல்களை நாம் அறிவோம் . ஆனால் இன்றைய நற்செய்தியில் இறைவன் மக்களை நோக்கி மனம் மாறுங்கள் என வேண்டுகின்றார். பொறுமையோடு காத்திருக்கின்றார்.

**நம் அழிவில் ஆனந்தம் கொள்பவரல்ல நம் இறைவன்**

இயேசு மக்கள் கூட்டத்துடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது ஒரு சிலர் இயேசுவிடம் வந்து, பலி செலுத்திக் கொண்டிருந்த கலிலேயரை பிலாத்து கொன்றான் என்னும் செய்தியை தெரிவிக்கின்றார்கள். யூதர்கள் மத்தியில் ஏன் நம் மத்தியிலும் ஒருவரின் துன்பத்தை ,நோயை, வேதனையை, விபத்தினை, இழப்பினை அவர்களின் கடந்தகால வாழ்வோடும் குறைகளோடும் குற்றத்தோடும் இணைத்து புறணி பேசுவதும் அவர்களை இகழ்வதும் நடந்தேறுகின்றது. இயேசு கலிலேயரின் இறப்பினையும் சிலோவாமிலுள்ள கோபுரம் விழுந்து இறந்த 18 பேரையும் அவர்களின் பாவ வாழ்வோடும் குற்றங்களோடும் இணைத்துப் பார்க்க வில்லை. மாறாக அவர்களின் இறப்பினைக் குறித்து வேதனைப்படுகின்றார், அங்கலாய்க்கின்றார். நல்ல மனிதர்கள் துன்புறுகின்றபொழுதும் தீமைகளினால் இவ்வுலகம் ஆட்கொள்ளப்படும் பொழுதும் இறைவன் எங்கே? என்னும் கேள்வி எப்பொழுதும் எழுப்பப்படுவதை நாம் அறிவோம்.

நம் அன்பு இறைவன் கோபுரங்களை தகர்த்தி இறப்பினை விபத்தினை வருவிப்பதில்லை. பெரும் கொள்ளை தொற்று நோய்களை அனுப்பி மக்களை மடியச் செய்வதில்லை. விபத்துக்களை உருவாக்கி மனிதர்களின் இறப்பினை

அழிவினை துன்பத்தை உருவாக்குவதில்லை. மாறாக அத்தகைய துன்பமான சூழல்களில் இறைவனும் அவர்களுடன் துன்புறுகின்றார். கண்ணீர் சிந்துகின்றார். இவ்வுலகின் சிலுவைகளை அவரும் நம்முடன் இணைந்து சுமக்கின்றார். நம் இறைவன் நம் துன்பங்களை கண்டு வேடிக்கை காண்பவரல்ல. மாறாக,ஓடிச் சென்று கரம் தந்து தாங்குபவர். இறைவனின் கரம் வாழ்வையும் கனிவையும் தோழமையையும் உடனிருப்பையும் வழங்கும் கரம்.

### மனம் மாறா விட்டால் அழிவீர்கள் இது அச்சுறுத்தலல்ல.

'நீங்கள் மனம்மாறாவிட்டால் அழிவீர்கள்' என இயேசு கூறுவது, அச்சுறுத்தலின் வார்த்தைகள் அல்ல. நம்மை பயமுறுத்தி நடுங்கச் செய்து மன மாற்றத்தை உருவாக்குவது இறைவனின் பணி அல்ல. மனமாற்றம் அடைவது என்பது வாழ்வின் திசையை மாற்றுவது. நமது வெறுப்பும் கள்ள மன நிலையும் கோபமும் மன்னிக்க இயலா மன இறுக்கமும் மாறவேண்டும். நேர்மையாய் இயல்பாய் இணக்கமாய் தாராளமாய் இருக்கவே இயேசு நற்செய்தியில் அழைப்பைத்தருகின்றார்.

மனமாறாவிட்டால் அழிவீர்கள் என்னும் இயேசுவின் வார்த்தைகளை அச்சுறுத்தலாக கருதக் கூடாது. நம்மை அச்சுறுத்துவது இறைவனின் செயலே அல்ல. மாறாக, இறைவன் தான் பார்த்துப் பார்த்து அழகுடனும் மாண்புடனும் தனது சாயலுடனும் படைத்த மனித இனம் அழிந்துவிடக்கூடாது என்னும் பேராதங்கத்தில் மக்களை நோக்கி வேண்டுகின்றார். அழிவிற்கான பாதையை கைவிடக் கோருகின்றார். மக்களின் தீயவாழ்வைக் கண்டு கலங்குகின்றார்.

### மனிதர்கள் மனமாற்றம் அடையாவிட்டால்...

இவ்வுலகின் அழிவிற்கும், விபத்திற்கும், தீமைக்கும், இறைவனை தொடர்புபடுத்திப்பேசுவது தவறு. இவ்வுலகின் தீமைகளும் விபத்துகளும் பேரழிவுகளும் மனிதர்களின் பேராசையினால் குரோதத்தினால் தவறான முடிவுகளினால் தன்னலத்தினால் பிறரை விட வாழ்வில் முந்திச் செல்லவேண்டும் என்னும் மனநிலையினால் நிகழ்கின்றது. இவ்வுலகின் மனிதர்களும் அரசியலும் அவற்றைச் சார்ந்த தங்களின் திசையை மாற்றாவிட்டால் அழிவு நடந்தேறுவது மிகத்தொலைவில் இல்லை. மனமாற்றம் என்பது நம் வாழ்வின் நிலைப்பாட்டின் எண்ணங்களின் திசையை மாற்றுவது. உறவில் அரசியல் முடிவுகளில் நாட்டுத்திட்டங்களில் இயற்கை பாதுகாப்பில் சக மனிதர்களின் வளர்ச்சியில் பிறரை ஏற்று மதித்து சமமாக மதித்து வாழ்வதில் பிறரின் துன்பங்களை வேதனைகளை அறிந்து உடனிருப்பதில் மனம் மாற்றம் அடையாவிட்டால் இவ்வுலகம் கொஞ்சம் கொஞ்சமாக அழிவினை நோக்கி பயணிப்பதை நம்மால் தடுக்க இயலாது. நமது வன்முறையும் வெறுப்பு அரசியலும் மாறவேண்டும். இல்லையேல் இவ்வுலகம் அமைதியை இழந்து அழுகையும் வேதனையும் பயமும் நிறைந்த இடமாக மாறிவிடும். எனவேதான் இறைவன் நம்மை நோக்கி மனம்மாற வேண்டுகின்றார்.

### பொறுமை காத்தல் - பலவீனம் அல்ல

காய்க்காத அத்திமர உவமையை மக்களுக்கு எடுத்துக்கூறி நாம் பலன்தர வேண்டும் என இறைவன் காத்திருக்கின்றார் என்பதை இயேசு பதிவுசெய்கிறார். இறைவனின் கரங்களில் கோடாரி அல்ல மாறாக உரமும், ஒளியும், நீரும் கொத்தி

பலன்தர உற்சாகமூட்டும் நலன்கள் மட்டுமே உண்டு. இறைவன் மீண்டும் மீண்டும் ஒரு வாய்ப்பினை வழங்குகின்றார். வாழ்வில் கனிதருவதே நமது கிறித்தவ அழைப்பு. மீண்டும் இன்னொரு ஆண்டினை வழங்கி இன்னும் அதிகமான ஒளியை பெறச்செய்து நீருற்றி உரமிட்டு அதிக கவனம் செலுத்தி கனிதர உந்தித் தள்ளுகின்றார். காத்திருக்கின்றார். இதனை இறைவனின் பலவீனமாகக் கருதக்கூடாது. மாறாக இறைவன் நம்பிக்கையோடும் எதிர்நோக்குடனும் அடுத்த ஆண்டிற்கு கடந்து செல்கின்றார்.

நமது பலவீனம் குறைபாடு பலன்தர தாமதித்தல் இவற்றையெல்லாம் தாண்டி, நமது உள்ளத்தின் ஆழத்தில் புதைந்திருக்கும் இறை ஒளியை அவரின் சாயலை கனிதரும் விருப்பத்தை ஆற்றலை இறைவன் உற்றுநோக்கி அவற்றை வெளிக்கொணர முயற்சிக்கின்றார். இறைவனின் முடிவு கடந்தகால நமது பலனின்மையில் சார்ந்து இருப்பதில்லை. மாறாக நாம் பலன்தருவோம் என்னும் மங்காத எதிர்நோக்கின் நம்பிக்கையின் அடிப்படையில் மட்டுமே அவரது முடிவு அமைந்துள்ளது.

புனித அகுஸ்தினார் மனமாற்றத்தை இவ்வாறாக குறிப்பிடுகின்றார். ‘உண்மையான மனமாற்றம் இறைவன் மீது நாம் கொண்டிருக்கும் பயத்தினால் வருவது அல்ல. மாறாக, நாம் அனுபவிக்கும் இறை அன்பிலிருந்து ஊற்றெடுக்கின்றது.’ இறைவனை அன்பு செய்பவர்கள், சகோதர சகோதரிகளை நேசிப்பவர்கள், இப்பிரபஞ்சத்தை காக்க நினைப்பவர்கள் மனமாற்றத்தைத் தேடுவார்கள். கனிதராமல் பலனின்றி நமது காலத்தை கடத்துவது இவ்வுலகின் பேரழிவிற்கு இட்டுச்செல்லும். இறைவன் நம்மீது கொள்ளும் நம்பிக்கையை எதிர்நோக்கினை பொய்க்கச்செய்ய வேண்டாம் அதனை மெய்யாக்குவோம்.



30.03.2025

# தவக்காலம் நான்காம் ஞாயிறு

**யோசுவா 5 : 9A, 10-12; 2 கொரி 5:17-21; லூக் 15:1-3, 11-32**

# ‘பாவத்தின் மீது அல்ல, பாவிகளின் மீது தன் கண்களைப் பதியும் கருணை இறைவன்’



ஒரு மனிதர் ஓர் மலை மீது ஏறி தனது வாழ்வை முடித்துவிட நினைக்கின்றார். வாழ்வில் விரக்தி வெறுமை குற்றஉணர்வு இவையெல்லாம் அவரை அத்தகைய முடிவு எடுக்க உந்தியது. தன் வாழ்வை முடிப்பதற்கு முன்பாக ஒரு குருவானவரின் இல்லத்தைக் கடந்து செல்ல நேரிட்டது. அவர் குருவானவரிடம் சென்று அவரிடத்தில் தனது வாழ்வு முழுவதையும் பற்றிக் குறிப்பிட்டு கடவுளின் அனைத்து கட்டளைகளையும் தனது வாழ்வில் மீறியதால் தனக்கு வாழ்வில் மீட்பு இல்லை எனக் கூறினார். குருவானவர் அவரிடம் மறுமொழியாக கடவுளின் அன்பும் இரக்கமும் மிகப் பெரியது. எல்லாச் சூழலிலும் கடவுள் தன் அன்பை வழங்கிக் கொண்டே இருக்கிறார். நாம் அவரது அன்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினார். அந்த மனிதர் அதனை ஏற்றுக்கொள்ள மனமில்லாமல் எனது மனம் ஓட்டைகள் நிறைந்த வாளியைப் போன்றது. கடவுளின் மன்னிப்பு என்னை மீண்டும் மீண்டும் நிரப்பினாலும் அனைத்தும் ஒழுகிக்கொன்டே சென்று விடுகின்றது என்றார்.

குருவானவர் அவரிடம் உமது உள்ளம் ஓட்டைகள் நிறைந்த வாளியைப் போன்றதுதான். ஆனால், இறைவனின் இரக்கம் கடல் போன்றது. நீங்கள் ஓட்டைகள் நிறைந்த வாளியே. இரக்கக் கடலில் வீசுகின்ற பொழுது எத்திசையிலும் கடல்நீரே சூழ்ந்து இருக்கும். வாளியின் உள்ளேயும் வெளியேயும் கடல் நீர் சூழ்ந்து இருப்பது போன்று உங்களின் எல்லா நிலைகளிலும் வாழ்வின் அனைத்து பக்கங்களிலும் கடவுளின் அன்பும் இரக்கமும் நிறைந்து இருக்கின்றது என்று கூறினார்.

லூக்கா நற்செய்தியை இரக்கத்தின் நற்செய்தி என்று அழைப்பது மிகவும் பொருத்தமானது. 15ம் அதிகாரம் முழுவதும் லூக்கா நற்செய்தியாளர், இழந்து போனதை தேடி கண்டடையும் மூன்று உவமைகளை எடுத்து உரைக்கின்றார். கடவுளின் இரக்கம் ஒருபொழுதும் குறைவுபடுவதில்லை என்பதை காணாமல் போன மகனின் உவமை எடுத்துரைக்கின்றது.

**1. பிள்ளைகளின் சுதந்திரத்தை மதிக்கும் இறைவன்**

இன்றைய நற்செய்தியின் உவமையில் இரண்டு மகன்களைப் பற்றி நற்செய்தியாளர் குறிப்பிடுகின்றார். மூத்த மகன் தந்தைக்கு கீழ்ப்படிந்து தந்தையின் வயல்வெளியில் பணி புரிந்து வருபவராக சித்தரிக்கப்படுகின்றார். இளைய மகன் தனது நேரத்தை விரயமாக்கி நண்பர்களுடன் தந்தையின் சேமிப்பையும் பணத்தையும் அழித்து விட தன் தந்தையின் சொத்தில் பாதியைக் கேட்கின்றார். தந்தையும் அவர் சொத்தை அவர்களுக்கு பகிர்ந்து அளிக்கின்றார். தனது பிள்ளைகளின் சுதந்திரத்தை மதித்து அவர் செயல்படுகின்றார்.

இறைவன் நம்மை ஒருபொழுதும் அவரின் அடிமைகளாகவோ வேலையாட்களாகவோ வைத்திருக்க விரும்புவதில்லை. நாம் அனைவரும் நமது உள்ளப் பக்குவம் மனமுதிர்ச்சி அறிவு அனுபவம் இவற்றின் அடிப்படையில் நாம் சுதந்திரத்துடன் வாழ்ந்திடவும் சரியான முடிவுகளை மேற்கொள்ளவும் அனுமதிக்கின்றார்.

**2. பசியின் பொருட்டு தந்தையின் இல்லத்தை தேடிய மகன்**

இளைய மகன் தந்தையிடமிருந்து பெற்றுக்கொண்ட சொத்தைக் கொண்டு நீண்ட பயணம் மேற்கொள்கின்றான். தனது பணத்தை விரயமாக்கி தவறான வழிகளில் செலவு செய்து, இளவரசனைப் போன்று வாழ்ந்தவன் பன்றி மேய்க்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றான். உணவின்றி வாடிய பொழுது அவனின் தந்தையின் இல்லத்தை நினைவு கூர்ந்து அங்கு திரும்ப விரும்புகின்றார். மகனாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எனக் கருதி, பணியாளனாக இருக்க விரும்பி தந்தையின் இல்லம் திரும்ப முடிவெடுக்கின்றான். இளைய மகன் தான் எடுத்த முடிவினை செயல்படுத்துவதில் தீர்க்கமாய் செயல்படுகின்றார்.

தந்தையின் அன்பை உணர்ந்தவராக அவர் வீடு திரும்பவில்லை. மாறாக, பசியின் பொருட்டே திரும்புகின்றார். உணவின்றி மடிந்து போவேன் என உணர்ந்து அச்சப்பட்டு திரும்புகின்றான். இன்று பசியாய் தாகமாய் இருக்கும் அனைவரும் தந்தையின் இல்லம் திரும்ப வேண்டும். வானகத்தந்தையே நம் பசியையும் தாகத்தையும் தீர்ப்பவர். தற்காலிக மகிழ்ச்சியைத் தேடி இல்லத்தை விட்டு வெளியேறிய மகன் வாழ்வின் அடிப்படையான உணவிற்காக தந்தை இல்லம் திரும்புகின்றார்.

**3. என்றும் திறந்திருக்கும் தந்தையின் இல்லம்**

தந்தையின் இல்லம் நோக்கி திரும்பும் மகனிற்காக அவரது இல்லம் என்றும் திறந்தே இருக்கின்றது . தந்தை காத்திருக்கின்றார். இளைய மகன் (மனிதராகிய நாம் அனைவரும்) தந்தையின் இல்லத்தை நோக்கி நடக்கின்றார். தந்தை (இறைத்தந்தை) மகனை நோக்கி ஓடுகின்றார், தந்தையே மகனை முதலில் காண்கின்றார். பரிவு கொள்கின்றார். கட்டித் தழுவி முத்தமிடுகின்றார். இளைய மகன் தன் வாயைத் திறந்து



மன்னிப்பு கோருவதற்கு முன்பாகவே தன் இயலாமையை தவற்றை ஏற்றுகொள்வதற்கு முன்பாகவே தந்தை தன் மகனை ஏற்றுக்கொண்டு அரவணைக்கின்றார்.

**4. விசாரணை கூண்டில் நிறுத்தி கேள்விகளால் குறுகச் செய்பவர் நம் இறைவன் அல்ல:**

நீ எங்கிருந்து வருகின்றாய்? நீ என் பணத்தை என்ன செய்தாய்? ஏன் என்னை அவமானத்திற்கு உள்ளாக்கினாய்? நீ ஏன் இந்த நிலையில் இருக்கின்றாய்? மீண்டும் மன்னிப்புக்கோரி உன் இல்லத்தை கட்டியெழுப்ப விரும்புகின்றாயா ? என்னுடன் இணைந்து இவ்வீட்டில் வாழ விரும்புகின்றாயா ? என விசாரணை கேள்விகளை எழுப்பாமல் அவனுக்கு ஆடை என்னும் மாண்பை அணிவித்து மோதிரம் என்னும் மகனுக்குரிய மதிப்பை வழங்கி பாதுகாக்கும் மிதியடிகளை வழங்கி விருந்து வழங்கி கொண்டாடுகின்றார். தந்தையை நோக்கி உன்னால் எவ்வளவு இயலுமோ எவ்வளவு நெருங்கிச் செல்ல இயலுமோ, அவ்வளவு தூரம் சென்றாலே போதும். இறைவனே மீதி தூரத்தை நமக்காக கடந்து நம்மை அரவணைக்க ஓடி வந்து ஏற்றுக் கொள்வார். நம் தேடிவரும் என்னும் விருப்பமும் அதன் முனைப்பும் போதுமானது. நாம் அனைவரும் அவரது இல்லத்தில் அன்பு பிள்ளைகளாவோம்.

இளைய மகன் ஒரு பணியாளராக மீட்கப்பட வேண்டும் என விரும்பினான். தந்தையோ அவரை பிள்ளைகளுக்குரிய இதயத்தோடு மீட்கப்பட வேண்டும் என விரும்புகின்றார். டான்டே, என்னும் இத்தாலிய எழுத்தாளர் DIVINE COMEDY என்னும் கதைக் கவிதையில் இவ்வாறு குறிப்பிடுகின்றார். நாம் அனைவரும் விண்ணகம் நோக்கிய பயணத்திற்கு தயாராகி செல்லும் முன் இறைஇரக்கம் என்னும் ஆற்றில் இறக்கப்படுவோம். நமது பாவங்களும் அதன் நினைவுகளும் அங்கே கழுவப்படுகின்றது. இறைத்தந்தையின் கண்கள் பாவத்தின் மீது பதிவதில்லை. மாறாக அவரது பிள்ளைகள் மீது பதிகின்றது அவர்களை குணமாக்குகின்றது. எனவே அவரின் இரக்கத்தையும் மன்னிப்பையும் ஏற்றுக்கொள்வோம்.

அருள் முனைவர் அந்தோணி ஜோசப்

(செங்கல்பட்டு மறைமாவட்டம்

பேராசிரியர் தூய பேதுரு பாப்பிறைக் குருமடம் பெங்களூர்



# நம்முடன் தூய ஆவியார்

## 10. பிளவுபட்ட இடத்தில் இருக்க பிரியப்படாதவர்

ரோனா ஆல்பர்ட்

இறையாட்சி என்றால் என்ன? தாயும் தந்தையுமான இறைவன் முன்னிலையில் நாம் அனைவரும் சகோதர சகோதரிகளே. இறைமக்களாகிய நாம் ஒரே குடும்பத்தின் உறுப்பினர்கள். நாம் அனைவரும் இனம் மொழி சாதி நிறம் பாலினம் இவற்றால் எவ்வித உயர்வு தாழ்வும் பாராட்டாமல் ஒருவருக்கொருவர் அன்பிலும் நீதியிலும் சமத்துவத்திலும் ஒற்றுமையிலும் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். இதன் அடிப்படையில் எல்லோரும் எல்லாம் பெற்று எந்தவித வேறுபாடு அல்லது ஏற்றத்தாழ்வும் இல்லாத நிறைவாழ்வுடன் நிலைவாழ்வை நோக்கி பயணிப்பவர்களாக வாழ்வதை நோக்கமாகக் கொண்டு அமைவதே இறையாட்சி.

அக்காலத்தில் இஸ்ரயேல் மக்களிடையேயும் பல சமூக அநீதிகள் மலிந்து கிடந்தன. கையூட்டு ஊழல் பெண்ணடிமை கொத்தடிமை ஏழைகளுக்கும் கைம்பெண்களுக்கும் கொடுமை போலி வழிபாடு அந்நிய தெய்வங்களை வழிபடுதல் போன்ற பல தீமைகள் நிறைந்திருந்தன. இதனால் மக்கள் இறைவனோடும் அயலாரோடும் உறவு கொள்ள முடியாமல் வாழ்ந்தனர். தாம் தேர்ந்தெடுத்த மக்களின் தறிகெட்ட நிலையைக் கண்டு வருந்திய இறைவன் இந்நிலையை மாற்ற விரும்பினார். விசுவாசம் அன்பு உண்மை நேர்மை பகிர்வு சமத்துவம் சகோதரத்துவம் முதலான இறையரசின் மதிப்பீடுகளுக்கு ஏற்ப மக்கள் வாழ்கின்ற புதிய சமுதாயத்தைப் படைக்க விரும்பினார். அதன்பொருட்டு முதலில் இறைவாக்கினர்களை அனுப்பி வைத்தார். இறுதியில் தம் ஒரே மகன் இயேசுகிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பி வைக்க அவரும் இம்மண்ணில் இறையரசை நிறுவினார். அவர் தோற்றுவித்த இறையரசைக் கட்டிக்காக்கும் பொறுப்பினை நம் ஒவ்வொருவருக்கும் வழங்கியுள்ளார். எனினும் நம்மிடையே இறையரசின் விழுமியங்கள் கடைப்பிடிக்கப் படுகின்றனவா என்றால் இல்லை என்றே கூறவேண்டும்.

உலகில் உள்ள எல்லா மனிதர்களும் மாண்புடையவர்களே. ஏனெனில் கடவுள் அவர்களைத் தமது சாயலாகவே படைத்துள்ளார். நாட்டில் பொருளாதாரம் சமூகம் அரசியல் பண்பாடு ஆகிய அனைத்துத் துறைகளிலுமே ஏற்றத்தாழ்வுகள் நிறைந்து கிடக்கும் நிலையில் திருச்சபையிலும் பங்கு சமூகத்திலும் சாதி பணம் பதவி செல்வாக்கு பாலினம் முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் வேற்றுமை பாராட்டுவது இறைவனின் படைப்பு நோக்கத்திற்கே எதிரானது.

இயேசுகிறிஸ்து உலகை மாற்றவே மண்ணுக்கு வந்தார். கிறிஸ்தவர்களாகிய நாமும் உண்மையான அன்பாலும் உயரிய நோக்கங்களாலும் உலகை மாற்றப் பிறந்தவர்களே. ஆனால் நாமே சாதி அடிப்படையில் மாறிப் போனவர்களாக அதிலேயே ஊறிப் போனவர்களாக வாழ்கிறோம். தற்போது இறைமக்களிடையே பரவலாக நிகழ்ந்து கொண்டிருக்கும் சாதிப் பிரச்சனைகள் இன்றும் நாம் ஊனியல்பில்தான் வாழ்கிறோம் என்பதை உறுதிப்படுத்துகிறது. “நீங்கள் இன்னும் உங்கள் ஊனியல்பின்படியே நடக்கிறீர்கள். ஏனெனில் பொறாமையும் சண்டை சச்சரவும் உங்களிடையே உள்ளன” (1கொரி 3:3) என்று சுட்டிக்காட்டி, “ஆனால் நீங்கள் ஒருவரை ஒருவர் கடித்து விழுங்குவதை நிறுத்தாவிட்டால் ஒருவரால் ஒருவர்

அழிக்கப்படுவீர்கள்" (கலா 5:15) என்று எச்சரிக்கவும் செய்கிறார் புனித பவுல்.

"மனிதரின் அடிப்படை உரிமைகளைப் பொறுத்தவரையில் பால் இனம் நிறம் சமூக நிலை மொழி சமயம் ஆகியவை காரணமாகப் பாகுபாடு காட்டும் எந்த முறையையும் அது சமூக அடிப்படையில் எழுந்ததாயினும் சரி பண்பாட்டு அடிப்படையில் எழுந்ததாயினும் சரி அது கடவுளின் திட்டத்திற்கே எதிரானது என்று வெறுத்து ஒதுக்கித் தள்ள வேண்டும் (இன்றைய உலகில் திருச்சபை எண் 29) என்று திருச்சபை வலியுறுத்துகிறது. நாம் பால் இனம் நிறம் சாதி மொழி சமயம் போன்ற வேற்றுமைகளைத் தாண்டி அன்பு செய்யும்போதுதான் கிறிஸ்துவின் உண்மைச் சீடர்களாகிறோம். கிறிஸ்துவின் அன்பிற்கு சாட்சி பகிர்கிறோம். தூய ஆவியாரின் ஒன்றிப்பில் வாழ்கிறோம்.

சமாரியர்களையும் தாங்கிப் பிடித்த இயேசுவின் இதயத்தை முள்ளாகத் தைக்கும் சாதிப் பாகுபாடு குறித்து நாம் எத்தனை பேர் யோசிக்கிறோம்? எல்லா பாகுபாடுகளையும் விட சாதிப் பாகுபாடு கொடுமையானது என்பதை எவராவது அறிந்திருக்கிறோமா? மற்ற வேற்றுமைகள் எல்லாமே மாற்றத்துக்குரியவை. அவை உண்டாகும் உருத்தெரியாமல் மாறிப்போகும். ஆனால் இரத்தத்தில் ஊறிப்போன சாதி வேற்றுமை கோயில் கல்லறை தெருக்கள் பள்ளிகள் என எல்லா நிலைகளிலும் தன் கொடுங்கரங்களை நீட்டித் துழாவுகிறது. இப்படி பேதம் பார்க்கும் இறைச்சமூகத்துக்குள் எவ்விதம் தந்தை வருவார்? மகன் உறைவார்? தூய ஆவி பிரசன்னமாவார்?

இன்றைய உலகில் நாம் பல்வேறுபட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் நாம் அனைவருமே இரண்டு சமூகங்களை மட்டுமே பகிர்ந்து கொள்கிறோம். ஒன்று நாம் அனைவரும் மனிதகுலத்தின் உறுப்பினர்கள் அடுத்து நாம் அனைவரும் உலகளாவிய உயிர்க்கோளத்தைச் சார்ந்தவர்கள். இதையும் தாண்டி சிறப்பான விதத்தில் திருச்சபை நம்மை இறைச்சமூகமாக உருமாற்றி இருக்கிறது. எனினும் நீதிக்கு சாட்சியாக ஒளிர வேண்டிய இறைச்சமூகம் அநீதியினால் பிளவுபட்டுக் கிடக்கிறது. அனைவரும் இறைவனின் மக்கள் அனைவரும் இறைச்சாயலை உடையவர்கள் அனைவருக்கும் மனித மாண்புடன் வாழ உரிமை உண்டு என்ற விசுவாசப் பார்வையும் நம் தந்தையாகிய இறைவன் அவர்களை அன்பு செய்வதுபோல் நாமும் அன்பு செய்ய வேண்டும் என்ற உள்உணர்வும் இன்றைய அடிப்படைத் தேவைகள் என்பதை மறந்து நடக்கிறது.


தூய ஆவியாரின் கொடைகள் ஒருவருக்கு அருளப்படுவது தனிப்பட்ட அவரின் நன்மைக்காக அல்ல பொது நன்மைக்காகவே. நம்முடைய திறமைகளாலும் கொடைகளாலும் கிறிஸ்துவின் மறையுடலாம் திருச்சபையை உருவாக்கி வளர்க்க வேண்டும். ஆனால் திருச்சபையை அழிக்கும் பிரிவினை சக்திகள் இன்று திருச்சபைக்குள்ளேயே முளைத்துவிட்டன. இத்தகைய நிலையில் பங்கு சமூகத்தில் மனச் சமாதானம் தழைத்தோங்க வாய்ப்பில்லை. அவ்விடத்தில் ஆவியாருக்கும் வேலையில்லை. தூய ஆவியார் இல்லாத இடத்தில் அன்புக்கும் அமைதிக்கும் பஞ்சமே நிலைக்கும். இந்தியாவில் மத அடிப்படையில் மக்கள் தனிமைப்படுத்தப்படுகின்றனர். ஆனால் மதத்துக்குள்ளேயே சாதி அடிப்படையில் தனிமைப்படுத்தப்படுவது இறைவனுக்கு ஏற்புடைத்தானதா என்ன?

சாதிப் பிரச்சனை ஒருபுறம் என்றால் ஆலயங்களைக் கூட அரசியல் களங்களாக்கும் நபர்களும் பெருகி வருகின்றனர். இது கட்சி அரசியல் அல்ல யார் பெரியவர் என்ற வீண் பெருமைக்கான அரசியல். இத்தகைய போட்டி பொறாமைகளினால் பாதிக்கப்படுவது ஆலய வளர்ச்சியும் பங்கின் வளர்ச்சியும் மட்டுமல்லாமல் இறைமக்களின் ஆன்மிக வளர்ச்சியுமே.

அன்பியங்கள் அடிப்படை மாற்றுத் திருச்சபையாக விளங்குகின்றன. இதுவரையிலும் பங்கினை மையமாகக் கொண்டு விளங்கிய வாழ்வு மக்கள் மயமாக்கப்பட்டு மக்களே வாழ்வை நிர்ணயிக்கவும் திட்டமிடவும் பங்கேற்கவும் செய்யும் வகையில் இறைமக்களை மையமாகக் கொண்ட திருச்சபையாக

உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அன்பியங்களை உருவாக்கி இறைமக்களை ஒன்றிணைக்க தாய்த் திருச்சபை வழி வகுத்துத் தந்தால் அவற்றிலும் கோஷ்டி மனப்பான்மை தலை தூக்கி நிற்கிறது. இப்படிப்பட்ட இடங்களில் தூய ஆவியார் எப்படித் தங்க ஆசைப்படுவார்? இத்தகு சூழ்நிலையை அமைதியாகச் சமாளிக்கும் திறனை பங்கின் தலைவர்களான பங்கு குருக்கள் தூய ஆவியாரின் வழியாகவே பெற்றுக் கொள்கிறார்கள். திருச்சபையில் பிரிவினை உண்டு பண்ணுகிறவர்களைக் குறித்து புனித பவுல் உரோமையருக்கு எழுதிய திருமடலில் சகோதர சகோதரிகளே நான் உங்களிடம் வேண்டுவது நீங்கள் கற்றுக் கொண்ட போதனையை மீறிப் பிரிவினைகளையும் தடைகளையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்துக் கவனமாய் இருங்கள். அவர்களை விட்டு விலகுங்கள் (உரோ 16:17) என்று எச்சரிக்கிறார்.

இக்கூற்று பங்கு சமூகத்திற்கும் பொருந்தும். அமைதியின் இருப்பிடமான ஆலயம் தேடி வரும் மக்கள் தங்கள் மனஅமைதிக்கு குந்தகம் ஏற்படாமல்




பார்த்துக்கொள்ள வேண்டும். கோயில் குறித்து குறை சொல்பவர்களை முகத்தாட்சண்யம் பாராமல் விட்டு விலகி விட வேண்டும். நாம் கேட்பதற்குத் தயாராக இருந்தால் குறைகள் சொல்வதற்கு கூட்டமாகவே வருவார்கள். இவர்களைக் குறித்து யூதா தம் திருமடலில் இவர்கள் பிரிவினை உண்டு பண்ணுபவர்கள் மனித இயல்பின்படி நடப்பவர்கள் கடவுளின் ஆவியைக் கொண்டிராதவர்கள் (யூதா 1:19) என்று குறிப்பிடுகிறார். இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டில் அனைத்து மக்களையும் அரவணைக்கும் சகோதரத்துவம் என்ற தலைப்பில் கீழ்க்காணும் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. யாவரும் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர்கள். அவர்களில் சிலரை நம் உடன்பிறப்புகளாக நாம் நடத்த மறந்தோம் என்றால் கடவுளை அனைத்து மக்களின் தந்தையென நாம் அழைத்து மன்றாட இயலாது. அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ள இயலாது (1யோவா 4:8) என விவிலியம் கூறுமளவிற்குத் தந்தையான கடவுளோடு மனிதர் கொண்டுள்ள உறவும் அவர்களின் உடன்பிறப்புகளான மற்ற மனிதரோடு அவர்களுக்குள்ள உறவும் நெருங்கிப் பிணைந்துள்ளன. எனவே மனிதருடைய மாண்பையும் அதன்வழி பிறக்கின்ற உரிமைகளையும் பொறுத்தமட்டில் ஒரு மனிதரிடமிருந்து இன்னொரு மனிதரையோ ஓர் இனத்திலிருந்து இன்னோர் இனத்தையோ அநீதியாகப் பிரித்துப் பேசும் எந்தக் கொள்கையும் செயல்முறையும் அடிப்படையற்றவை. இக்காரணத்தை முன்னிட்டு இனம் நிறம் வாழ்க்கை நிலை சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் எம்மனிதரையும் பிரித்து வேறுபடுத்துவதும் அவர்களைத் துன்புறுத்துவதும் கிறிஸ்துவின் உளத்திற்கு முரணானவை எனத் திருச்சபை கண்டிக்கிறது. மேற்கூறப்பட்ட இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டின் அறிவுறுத்தல்களை மனதில் கொள்வோம். இறைவன் முன்னிலையில் சமம் எனப் படைக்கப்பட்ட மக்கள் வேறுபாடுகள் பாராட்டாமல் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மனப்பான்மையோடு வாழும்போது உயிர்த்த இயேசு ஆண்டவர் நம்மைத் தூய ஆவியாரின் கொடைகளால் நிரப்புகிறார். அதை விடுத்து வேறுபாடுகளை வளர்த்தால் நாமே வேர்களை இழந்தவர்களாக விரைவில் வீழ்ந்து விடுவோம். சகோதர சகோதரிகளே நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயரால் நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்வது இதுவே, நீங்கள் ஒத்தக் கருத்துடையவர்களாய் இருங்கள். உங்களிடையே பிளவுகள் வேண்டாம். ஒரே மனமும் ஒரே நோக்கமும் கொண்டிருங்கள் (1கொரி1:10)

# இதயத்தின் திரையிலிருந்து வாய்பேசட்டும்

**தியான பூஜன்**



தவக்காலம் கிறிஸ்தவர்களின் நோன்புக்காலம். எல்லா மதங்களிலும் இப்படிப்பட்ட காலங்களுண்டு. தவக்காலம் 'உனக்காக எல்லாம் உனக்காக' என கடவுள் மனிதர்களிடம் ஒப்புவித்த காலம். எனக்காக எல்லாம் எனக்காக என மனிதர்கள் கடவுளை ஏற்றுக்கொள்கிற காலம்.

இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பைக்கொண்டாட முன் தயாரிப்பாக கிறிஸ்தவர்களாகிய நமக்கு திருச்சபை ஏற்படுத்தி கொடுக்கின்ற காலம் இந்த தவக்காலம். இந்த புனித காலத்தை நாம் எவ்வாறு பயன்படுத்தப்போகிறோம்? நம்மை எப்படி தயார்படுத்திக்கொள்ளப் போகிறோம்?



ஒன்று : **ஜெபம் தவத்தில் ஈடுபடுவது**

இரண்டு : **தர்ம காரியங்களில் நாட்டம் செலுத்துவது**

மூன்று : **நோன்பிருந்து கடவுளை வழிபடுவது.**

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்கள் அதுபோல இதயத்தின் திரையிலிருந்து வாய் பேசட்டும். நமது கண்களே நமது உடலின் தீபம். நல்லவர்களை நல்ல நிகழ்வுகளை காண வேண்டும் நல்ல சொற்களை பேச வேண்டும். நல்லவர்களுடன் இணைந்து வாழவேண்டும் நம்முடைய மனதிலும் செயலிலும் இருக்கின்ற கெட்ட குணங்கள் நல்லவர்களின் நட்பினால், பூவுடன் கலந்த நார் மணப்பதுபோல, நல்லவர்களின் நட்பால் கெட்டவர்களாக வாழ்பவன் கூட நல்லவனாக திருந்தி நல்லபெயர் எடுத்து வாழ்வான்.

நந்தவனத்தில் செடிகளுக்கு போடும் உரங்களின் கெட்ட வாசனைகளை மீறி மலர்களின் நறுமணத்தை நாம் நுகர்வதுபோல, நம்முடைய மனங்களிலே எழுகின்ற கெட்ட எண்ணங்கள் செயல்களாக மாறுகின்றன. கெட்ட செயல்களினால் அவமானப்பட்டு மானம் மரியாதை இழந்து மனம் துயரப்பட்டு இதனால் பல நோய்கள் ஏற்பட்டு மூளையையும் நரம்பு மண்டலத்தையும் தாக்கி அவதிப்படுவதை, அணைபோட்டு நீரைத்தேக்கி நற்பயன்களுக்கு பயன் படுத்துவதைப்போல நல்லவர்களுடன் இணைந்து அவர்களுடைய அறிவுரைகளைக் கேட்டு வாழும்போது நமக்கு தீய எண்ணங்கள் தீயகாரியங்களின் மீது நாட்டம் ஏற்படாது.

தீய காரியங்களின் மீது நமக்கு நாட்டம் எழவில்லையெனில், நமது மனதில் எவ்வளவு ஆனந்தம் சந்தோஷம் அமைதி நிம்மதி இருக்கும். நிதானமாக சிந்தித்தால் இயற்கையாகவே நாம் நீண்ட ஆயுளுடன் வாழலாம்.

புனித லூக்கா நற்செய்தியில் 6: 43–45 வாசித்துப் பாருங்கள். "கெட்ட கனிதரும் நல்ல மரமுமில்லை நல்ல கனிதரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும். ஏனென்றால் முட்செடிகளில் அத்திப்பழங்களைப் பறிப்பாருமில்லை முட்புதர்களில் திராட்சை குலைகளை அறுத்து சேர்ப்பாருமில்லை. நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்து கொடுப்பர், தீயவரோ தீயதிலிருந்து தீயவற்றை எடுத்துக்கொடுப்பர். உள்ளத்தின் நிறைவுகளையே வாய்பேசும்".

நாம் நமது குடும்பங்களில் நல்லதையே பேச முயற்சிப்போம். கெட்ட வார்த்தைகளையும் கொடுஞ்சொற்களையும் நீக்கிவிட்டு இனிமையாக இன்சொற்களையே பேசலாம். இதனால் குடும்பத்தில் மனைவி தாய் தந்தையர் சந்தோஷப்படுவார்கள். குழந்தைகள் அன்பாக நல்ல முறையில் வளருவார்கள்.

நல்ல மனிதன் தன் பேச்சுக்கு தக்க பலனை அனுபவிப்பான். தன் வாய்க்கு காவல் வைப்பவன் உயிரைக் காத்துக் கொள்வான். கவலையீனமாகப் பேசுபவன் அழிவுக்கு நேராகப் போகிறான். அழிவின் பாதையில் செல்லும்படி நமது பாவங்கள் நம்மைப் பிடித்துத் தள்ளுகிறது. கெட்ட எண்ணங்கள் (தீய ஆவி) நம்மை தமது பிடியில் வைத்துக்கொண்டு வழி நடத்துகிறது. இதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது.

தீய ஆவியையும் தீய எண்ணங்களையும் தீய வார்த்தைகள் போன்ற பிசாசுகளை நாம் விரட்டி அடித்து வெளியேற்ற வேண்டும். அவ்வாறு நாம் விரட்டி அடிக்க வேண்டுமென்றால் நமக்கு மனதில் இதயத்தில் உறுதிவேண்டும். இந்த தவக்காலம் தூய மனதிற்கும் தூய இதயத்திற்கும் உரமிடுவதாய் அமைய வேண்டும் அமைத்துக்கொள்ள நாம் முயற்சிக்கவேண்டும்.

எபேசியர் 4:25–29ஐ வாசித்துப் பார்ப்போம். நல்ல சிந்தனைகளை மனதில் இருத்துவோம். "திருடுகிறவன் இனி திருடாமல் குறைவுள்ளவனுக்கு கொடுக்கத்தக்கதாய் தன் கைகளால் நல்ல வேலை செய்து உழைக்கக் கடவான். தீய வார்த்தைகள் ஒன்றும் நம் வாயிலிருந்து வரலாகாது."

சிறிய நெருப்பானது ஒரு பெரிய காட்டையே எரித்துவிடுகின்றது. அதுபோல இதயத்தில் எழுகின்ற தீய எண்ணங்கள் கெட்ட நடவடிக்கைகள் செயலாக மாறி பெரும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் பெரும் நோய்களையும் உருவாக்கி விடுகின்றன. இதனால் காட்டுத் தீயைப்போல மனிதன் தன்னைத்தானே அழித்துக் கொள்கிறான்.

மற்றவர்கள்மேல் குற்றம் கண்டுபிடிக்கும் கண்ணோட்டத்தில் இருந்தால், நமது குடும்பத்தினரையும் நண்பர்களையும் நமது ஊழியர்களையும் குறை சொல்லிக்கொண்டேயிருந்தால், நமது ஆன்மா நமது இதயம் கறைபட்டிருக்கிறது என்றும், நாம் கடவுளின் அன்பிலிருந்து நழுவி பாவத்தில் விழுந்து விட்டோம் என்பதை நாமே அறிந்துகொள்வோம்.

நீதிமான்களுடைய வாய் பிரியமானவைகளையே பேசும். ஒருவர் தம் பேச்சினாலே நற்பயன் அடைகிறார். நல்ல இதயம் உள்ள நல்லோருக்கு ஒருகேடும் வராது. மனக்கவலை மனிதரின் இதயத்தை வாட்டும். இன்சொல் அவர்களை மகிழ்விக்கும். மனிதர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் தீர்ப்பு நாளில் கணக்கு கொடுக்க வேண்டும் (மத் 12 : 36) எதை விதைக்கிறோமோ அறுவடை செய்வோம். நன்மை செய்வதில் மனந்தளராதிருப்போம்.




நல்ல விதைகள் முளைக்காமல் போவதில்லை நல்ல செயல்களும் நிச்சயம் பயன் தராமல் போகாது. எங்கே எப்படி? பலன் கிடைக்குமென்று வேண்டுமானால் நம்மால் புரிந்து கொள்ள முடியாமல் போகலாம். சுத்தமான இதயம் உள்ளவர்கள் எங்கேயோ எப்படியோ பலனை வட்டியும் முதலுமாக எப்படியாவது பெற்றே தீருவார்கள். இதுதான் உலகையும் நமது வாழ்க்கையையும் இயக்கும் எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவிடம் அமைந்திருக்கும் தர்மச் சக்கரம் ஆகும்.

ஆம் இதயத்தின் திரையிலிருந்து வாய் பேசட்டும்!

வளமான வாழ்வு மனிதர்கள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.



# புவியிடம் காட்டி

லூர்து எஸ். ராஜ்

அதுவரை விரைந்து சென்ற மகிழ்வுந்து திடீரென நின்றது. ஓட்டுனருக்கு சந்தேகம். அவர் முன்னால் மூன்று குறுகலான சாலைகள் குறுக்கிட்டன. அவற்றில் எந்த சாலை வழியாக செல்வது என்று அவருக்குத் தெரியவில்லை. முன் இருக்கையில் இருந்த அப்பா சொன்னார், நான் சிறுவனாய் இருக்கையில் இதில் ஒரு கைகாட்டி மரம் நிறுத்தப்பட்டிருக்கும். அது சாலை செல்லும் ஊரின் பெயரைக்காட்டும். இப்போது கைகாட்டியைக் காணோம்.

அப்பாவின் முன்னோர்கள் வாழ்ந்த சிற்றூர். அதன் அழகையும் சிறப்பையும் தன் மனைவி மக்களுக்கு காட்ட விரும்பினார். அதனால் அவர்களை கூட்டிகொண்டு புறப்பட்டு விட்டார். அவர்கள் மகிழ்வுந்து அந்த சிற்றூரை நெருங்கிவிட்டதாகத் தெரிந்தது. ஆனால் அங்கிருந்த 3 சாலை சந்திப்பில் எந்த சாலையில் செல்வது என்று எவருக்கும் தெரியவில்லை. அப்பாவுக்கே தெரியவில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். நல்ல வேளை நுங்கு குலையை சுமந்துகொண்டு ஒரு பெண் வந்தாள்.. அவரிடம் வழி கேட்டு அறிந்த பின் பயணம் தொடர்ந்தது.

ஓட்டுனர் தம்பி உனது புவி இடம் காட்டி (GPS) வேலை செய்யவில்லையா? அம்மா கேட்டார். நெல்லிக்குப்பம் மிகச்சிறிய குக்கிராமம் போல் தெரிகிறது.. அதனால் திரையில் தெரியவில்லை நான்கு சாலை சந்திப்பில் GPS திரையும் நின்று விட்டது என்றார் ஓட்டுனர்.

‘GPS எப்படியம்மா வேலை செய்கிறது? நவீன் கேட்டான். GPS என்றால் GLOBAL POSITIONING SYSTEM. இது TRIANGULATION என்ற முறையின்படி வேலை செய்கிறது. இதற்காக வானில் 4 செயற்கைக் கோள்களும் அவற்றில் துல்லியமாக நேரம் காட்டும் அணுக்கடிகாரங்களும் உள்ளன. நமது வாகனத்தின் கருவியிலுள்ள சமிக்ஞை வாங்கி தனக்கும் ஒவ்வொரு செயற்கை கோளுக்கும் இடைப்பட்ட தூரத்தை அளவிடுகிறது. முக்கோண முறையின்படி அது நமது வாகனத்தையும் செயற்கைக் கோளையும் நமது இலக்குடன் இணைக்கிறது. நாம் இலக்குடன் நெருங்குவதையும் அதில் இருந்து விலகுவதையும் திரையில் காண முடிகிறது என்றார் அம்மா.



திசை காட்டும் கருவி எப்படி வேலை செய்கிறது? இது மகள் பொன்மலரின் கேள்வி . அக்கருவியை எப்படி அசைத்தாலும் திருப்பி வைத்தாலும் அதில் உள்ள காந்த ஊசி எப்போதும் வடக்கு தெற்குமாகவே நிற்கும். அதை வைத்து திசைகள் அறியப்படுகின்றன என்றார் அப்பா.

வடக்கு திசை தெரியும் மற்ற திசைகளை நாம் எப்படி அறிய முடியும்? இது கடைக்குட்டி மகன் சுமனின் கேள்வி . போடா தேவாங்கு என்று அவனைக் கேலிசெய்த நவீன், அம்மா கடந்த வாரம் நாங்கள் திரைப்படம் பார்க்கச்சென்றோம். தியேட்டரில் நாங்கள் எதிர்பாராத வேறொரு



படம் திரையிடப்பட்டது. வெளியே விளம்பரம் செய்த படத்தை விட்டுவிட்டு வேறு படம் காட்டினர். அப்போது இவன் திரையின் பக்கமே திரும்ப மறுத்து படம் முடியும் வரை அப்படியே இருந்து கொண்டான். எவ்வளவோ சொல்லியும் திரும்பி படம் பார்க்கவில்லை என்றான்.

'விளம்பரம் செய்த படத்தை விட்டு முன் அனுமதி இல்லாமல் வேறு படத்தை எப்படி திரையிடலாம்?' கேட்டார் அம்மா. தியேட்டரில் ஒரே கூக்குரல் விசில் சத்தம் அடிபிடி கலாட்டா பலர் வெளியேறி விட்டனர். காவலர் வந்து அமைதிப்படுத்தினர். சிலர் அங்கேயே இருந்து படம் பார்த்தனர் இனி வீட்டுக்கு திரும்பாமல் நாம் அந்த படத்தை பார்த்து விட்டு போகலாம் என்று நினைத்து அந்த பாடாவதி படத்தை பார்த்தோம்.ஆனால் இவன் அடம் பிடித்து படத்தை பார்க்காமல் 2 மணி நேரமும் திரும்பியே அமர்ந்து கொண்டான் என்றான் நவீன்.

'சுமன் செய்தது சரிதான்' என்றார் அம்மா. இந்த தேவாங்கு செய்தது சரியா? காசு கொடுத்து டிக்கட் வாங்கிய நாங்கள் எப்படி திரும்புவது? டிக்கட் பணமும் திரும்பி கிடைக்காது என்று அறிவித்துவிட்டனர். பின்னர் என்ன செய்வது? என்றான் நவீன்.

'அவனைத் தேவாங்கு என்று சொல்லாதே' என்றார் அம்மா. ஏன் சொல்லக் கூடாது? தேவாங்கும் தியேட்டரில் இவன் இருந்ததைப்போல் எப்போதும் வடக்கு நோக்கியே இருக்குமாம். நாம் அதை திருப்பி உட்காரவைத்தாலும் அது வடக்கு நோக்கி திரும்பிக் கொள்ளுமாம் என்றான் நவீன்.

'நவீன் நிறுத்து. அவன் என் செல்லப்பிள்ளை. அவனை மீண்டும் தேவாங்கு என்று ஒருவரும் சொல்லக் கூடாது' என்றார் அம்மா . அப்பாவும் அதைக் கண்டிப்பாகச் சொன்னார். எனவே அந்த பேச்சு நின்றது. இனிமேல் தம்பியை தேவாங்கு என்று சொல்ல மாட்டேன், என்றான் அவன். சில நிமிடங்களில் அவர்கள் மூதாதையர் வசித்த சிற்றூரை அடைந்தனர்.

'அப்பா நீங்கள் தேவாங்கை பார்த்திருக்கிறீர்களா ? என்று கேட்டாள் பொன் மலர். பார்த்துள்ளேன் தேவாங்கு இரவில் இரை தேடும் சிறு பாலூட்டி விலங்கு .பிற விலங்குகளிடம் தொடர்பில்லாதது போல் தோன்றினாலும் மனிதர்களுக்கும் குரங்குகளுக்கும் இடையில் உள்ள முதனி என்னும் வரிசையைச் சேர்ந்த விலங்காகும்.இந்தியாவிலும் இலங்கையிலும் ஏராளமாக காணப்படுகின்றன. மழைவளக்காடுகளில் மரங்களிடையே வசிக்கின்றன என்று சொன்னார் அப்பா.




இப்போது வாகனம் சிற்றூரின் உள்ளே நுழைந்தது. ஏரி நீரோடை வாய்க்கால் பச்சைப்பசேல் நிலப்பரப்பு செடி கொடி மரங்கள் குறுகிய தெருக்கள் கூரை வீடுகள் உழவு செய்யும் மனிதர்கள் நாற்று நடும் பெண்கள் எல்லாமே அவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கத் தவறவில்லை. புவி இடம் காட்டியால் வழி காட்ட முடியாத சிற்றூரையும் அதன் அழகையும் அவர்கள் அனைவரும் பார்த்து மகிழ்ந்தனர்.




# அகில உலக மகளிர் தினம்
# மார்ச் 8
## மகளிருக்குள் மாணிக்கங்கள்

திருமதி. நற்கருணைமேரி

பெண்கள் வன்கொடுமைகள் , ஆணாதிக்கம் , பாலியல் வன்முறைகள் , பாலின பாகுபாடுகள் மூலம் பெண்களின் வாழ்க்கைப் பக்கங்களுக்கு முடிவுரை எழுத நினைக்கும் சமுதாயத்தின் பிடியிலிருந்து , சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவைகள் போல் உயிர்த்து , தடைகள் பல தகர்த்து , சாதனைகள் பல புரிந்து ,சரித்திரம் படைத்து வரும் பெண்கள் ஏராளம் .கடந்த 2024ஆம் ஆண்டில் நம் தமிழ்நாட்டில் சாதனை புரிந்த சில பெண்களை பற்றி இங்கு காண்போம் .

1. கேரம் விளையாட்டில் உலகச் சாம்பியன் பட்டம் வென்று , தங்கப் பதக்கம் வாங்கிய சென்னை வண்ணாரப்பேட்டை ஆட்டோ ஓட்டுனரின் மகள் காசிமா .

2. 2024 செப்டம்பரில் பாரீசில் நடைபெற்ற பாராலிம்பிக் பாட்மிட்டன் போட்டியில் , வெள்ளி பதக்கம் வென்ற காஞ்சிபுரத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி துளசிமதி.

3. சாதிய கொடுமைகளுக்கு சவுக்கடி கொடுக்கும் விதமாக ,ஒடுக்கப்பட்ட தலித் பெண்களுக்கு நீதி கிடைக்க பாடுபடும் சமூக ஆர்வலர் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த லலிதா .

4. சாதிப்பதற்கு வயது , இனம் , பொருளாதாரம் போன்று எதுவும் தடையில்லை என நிருபித்து உரிமையியல் நீதிபதிக்கான தேர்வில் தேர்ச்சி பெற்ற திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையை அடுத்த புலியூர் கிராமத்தைச் சேர்ந்த 23 வயது ஸ்ரீபதி .

5. கடந்த ஆண்டு கேரள மாநிலம் ' வயநாட்டில்' ஏற்பட்ட நிலச்சரிவில் 300 க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்த நிலையில் , சறுக்கும் சகதியில் இருந்து உயிர்களை காக்க ,190 அடி நீளமுள்ள தற்காலிக பாலத்தை , தன் குழுவினருடன் இணைந்து 1 மணி நேரத்தில் கட்டிமுடித்த இராணுவ அதிகாரி சீதா அசோக் ஷெல்கே .

6. 'பெரி பெரி திரு' என்ற அமைப்பை ஏற்படுத்தி திருநங்கைகளின் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டுவரும் சென்னையைச் சேர்ந்த நீலம் ஜெயின் . 2024 ஆம் ஆண்டின் சிறந்த சாதனை மகளிரில் ஒருவராக 'மக்கள் குரல்' நாளிதழால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் .]

7. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைக் கொண்டுவர காரணமாக இருந்த சென்னையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் அருணாராய் .

8. முதலீடோ , கடையோ , உற்பத்தி ஆலையோ இன்றி வாட்ஸ் அப் மூலம் ஆர்கானிக் பொருட்கள் விற்பனை செய்து, மாதம் 1 லட்சம் வருமானம் ஈட்டும் திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தைச் சேர்ந்த பூர்ணிமா மோகன் .


9. ஆதரவற்றோரின் சடலங்களுக்கு இறுதிக் காரியங்களைச் செய்துவரும் இந்தியாவைச் சேர்ந்த பூஜா ஷர்மா . ( BBC யின் 2024 ஆண்டிற்கான சிறந்த பெண் ஆளுமைகளின் பட்டியலில் இடம் பெற்ற இவர் டெல்லியை சேர்ந்தவர் .)

10. வணிகக் கப்பலுக்கான முதல் இந்திய எலெக்ட்ரோ டெக்னிக்கல் அலுவலராக வெற்றிக் கொடிநாட்டியிருக்கும் இந்தியாவின் 29 வயதான ரொமிதா பண்டேலா.

11. மகாராஷ்டிரா மாநில அரசின் முதல் பெண் தலைமைச் செயலராக பொறுப்பேற்றுள்ள சுஜாதா சவுனிக்.

*இன்னும் முகம் தெரியாத நீங்கள் , நான் போன்று*
*வேதனைகளை வீழ்த்தி ,*
*சாதனைகள் புரிந்து வரும்*
*சரித்திர நாயகிகள் எத்தனையோ பேர் !*
*உருகி விடுவோம் என்று தெரிந்தும்*
*ஒளியேற்ற தன்னைத் தருகின்ற*
*மெழுகுதிரிகள் இவர்கள் .*
*இவர்களுக்கு உருகவும் தெரியும்*
*உருக்கி எடுக்கவும் தெரியும் .*
*- பெண்கள்*

*கலங்குவதற்காக அல்ல*
*கதிரவன் போல் ஒளிவீசுவதற்காகப் பிறந்தவர்கள் .*
*மற்றவர்கள் நிழலில் வாழ்வதற்காக அல்ல*
*மற்றவர்களுக்கு நிழல் கொடுத்து வாழ வைப்பவர்கள் .*
*இத்தகைய இந்நிலத்தில் யாருக்கும் அஞ்சாத*
*நிமிர்ந்த ஞானச் செருக்குடைய பாரதியின்*
*புதுமைப் பெண்களை , சாதனை மகளிரை*
*அகில உலக மகளிர் தினத்தில் போற்றுவோம் .*
*பீடு இல் பெருமைப் புகழோடு அவர்கள்*
*நீடு நாள் நிலைத்து வாழ வாழ்த்துவோம் ........*




## புணரமைக்கப்பட்ட ஆலயத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் செலவினங்கள்

| | |
|---|---|
| மாதாவின் சுரூபம் | 30000 |
| புனித சூசையப்பர் சுரூபம் | 30000 |
| இரக்கத்தின் ஆண்டவர் சுரூபம் | 30000 |
| திரு இருதய ஆண்டவர் சுரூபம் | 30000 |
| புனித அந்தோணியார் சுரூபம் | 20000 |
| குழந்தை இயேசு சுரூபம் | 20000 |
| வானதூதர் சுரூபங்கள் | 1,00,000 |
| நற்கருணை பேழை | 2,80,000 |
| நற்கருணை கதிர் பாத்திரம் | 60000 |
| வாசக மேடை, கதவுகள் | 1,00,000 |
| திருப்பலி துவங்கும் மேடை | 50,000 |
| பலிபீடம் | 3,00,000 |
| வண்ணக் கண்ணாடிகள் | 90000 |
| Lights and Electricals | 2,00,000 |
| ஆலயம் முழுவதுமாக வண்ணம் புசுதல் | 3,00,000 |
| பாடுபட்ட திருச்சிலுவை | 1,00,000 |
| மக்கள் அமரும் பெஞ்ச் பாலிஸ் செய்ய ஒரு பெஞ்சுக்கு | 4000 |

சுரூபங்கள் விலை நீங்கலாக மற்ற செலவினங்கள் தோராயமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய தாராள உதவிகளால் மட்டுமே இப்பணியை நாம் முடிக்க இயலும் என்பதை நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

**அனைத்து நன்கொடையாளர்களுக்கும் நன்றிகள்**

# புனித சூசையப்பர் ஏன் கொண்டாடப்படுகிறார்?

காந்தி ரோஸ்

திருவிவிலியம் பொதுமொழி பெயர்ப்பு யோவான் 12:26 இவ்வாறு கூறுகிறது "எனக்குத்தொண்டு செய்வோருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார்". இறைவன் தம் திருமகன் இயேசுவைக்கொண்டுமண்ணகத்தில்அமைக்க விரும்பிய விண்ணரசைஅமைப்பதற்கு தொண்டு செய்தவர்களில் முதன்மையானவர்புனிதசூசையப்பரே.இறைமகன் பிறப்பெடுக்க கன்னி மரியா கருவியானாலும், இயேசுவின்பிறப்பின் அடிப்படைக்கும், வெளியுலக வாழ்வின் நீட்சிக்கும் சூசையப்பரின் துணையும் பணிவிடையுமே காரணமாக இருந்தது. அதன் பொருட்டு இறைவன் புனித சூசையப்பருக்கு அளித்த பரிசு, விண்ணகம் ஏறிச் சென்ற இயேசுவுடன், சூசையப்பரும்தமதுஉடலுடனும்ஆன்மாவுடனும்விண்ணகம்சென்றது.

விண்ணகத்திலுள்ள அனைத்துப் புனிதர்களும் நமது மதிப்பையும், மரியாதையையும்வணக்கத்தையும் ஒரு எல்லைக்குள் பெற வேண்டியவர்களே.ஆனால் புனித சூசையப்பர் நமதுஇதயங்களில் என்றென்றும் சிம்மாசனம் அமைத்து, அதில் அமர்ந்துள்ளார். அவர் நாசரேத் திருக்குடும்பத்தைப் பேணி பாதுகாத்தவர் மட்டுமல்ல, திருக்குடும்பத்தின்இரண்டு கண்களாக இயேசுவையும் மரியாவையும் பாதுகாத்துவழி நடத்தியவர். இப்பணியினை நிறைவேற்ற கடவுள் அவருக்கு எல்லா வகையான அருளையும், அன்பையும், பாதுகாவலையும் அள்ளிக்கொடுத்திருந்தார்என்பதுஉறுதியான உண்மையும் நம்பிக்கையுமாகும்.

விவிலியத்தை வாசிக்கும்போது புனித சூசையப்பரைக் குறித்து 'நேர்மையாளர்' என்ற ஒரே சொல்லில் அவருடைய பண்பு, குணநலன்களை நாம் புரிந்து கொள்ள முடியும்.கடவுள்மீது அவர் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவராகத் திகழ்ந்தார்.குழப்பமான மனநிலையில் அவர் இருக்கும்போதெல்லாம் நேரடியாகவே கடவுள் தம் தூதர் மூலம் பேசி அவரது மனக்குறையைப் போக்கி தைரியப்படுத்தினார்.அதேபோலசூசையப்பரும் தமக்குக் கொடுக்கப்பட்டபணியினை மிகவும் சிறப்பாகவும், நேர்த்தியாகவும் செய்து கடவுளின் நம்பிக்கைக்குரிய பணியாளர் என்ற பேற்றினைப் பெற்றார்.எல்லாம்வல்லஇறைவனுக்கு தம் உழைப்பினால் உணவு தந்துஅவர் ஞானத்திலும் அறிவிலும் வளர உறுதுணையாக இருந்தார்.

இறைமகன் இயேசு தமது உலக வாழ்வின்போது ஓராண்டு அல்ல, ஈராண்டல்ல முப்பதாண்டுகள்தம் வளர்ப்புத்தந்தைக்கு கீழ்ப்படிந்திருக்கிறார். எத்தனை நூறு முறைகள் சூசையப்பரை அப்பா அப்பா என்றும் தந்தையே தந்தையேஎன்றும் அழைத்திருப்பார்?இந்த மண்ணுலகில் இயேசு'அப்பா' என்றுநேரடியாகஅழைத்ததுசூசையப்பருக்கு கிட்டியதனிப்பெரும் பேறு அல்லவா? இப்படிப்பட்டபேறுமண்ணுலகில்எவருக்குக்கிடைத்துள்ளது?எவருக்குமேதராத உயர் இடத்தை புனித சூசையப்பருக்கு கடவுள் கொடுத்தார் என்றால் அவர் பார்வையில் சூசையப்பர் எவ்வளவு உயர்ந்தவராக இருந்திருக்கக் கூடும். அதன் காரணமாகத்தானே இறைவனின் மகனே புனித சூசையப்பருக்குக்கீழ்ப்படிந்திருந்தார்.

திருமுழுக்கு யோவான் இயேசுவின்முன்னோடிதான். அவருடைய பணிக்கு விண்ணகம்அளித்த பரிசு,அவர் இயேசுவுக்கு திருமுழுக்கு கொடுத்ததுதான்.திருமுழுக்கு யோவான் விண்ணக அரசை அறிவித்தார்,சூசையப்பரோ அந்த விண்ணக அரசை நாசரேத்தில் நிலை நாட்டிக் காட்டினார்.

மூவொரு இறைவன் (பரிசுத்த தமத்திரித்துவம்) குறித்தஇறை இரகசியம் சூசையப்பருக்கு மட்டுமே வெளிப்படுத்தப்பட்டது. மூவொருஇறையின் இரண்டாம் நபராகிய மகன், பூமியில்மனிதப் பிறப்பு எடுக்கப்போகும் இறைவனே என்ற மறையுண்மை சூசையப்பர் தவிர எந்தஇறைவாக்கினருக்கும், புனிதருக்கும்தனிப்பட்ட முறையில் எடுத்துரைக்கப்படவில்லை.மனிதப் பிறப்பெடுக்கும்இறைமகனுக்கு'இயேசு' என்னும் பெயர் வானதூதர் மூலமாக விண்ணகத்தால் அறிவிக்கப்பட்டாலும், மண்ணகத்தில்அதிகாரப்பூர்வமாக அப்பெயரைச் சூட்டும் பொறுப்பும் அதிகாரமும்சூசையப்பரைத்தவிரவேறு எவருக்குமே வழங்கப்படவில்லை.இறைமகன் இயேசுவுக்கு'தாவீதின் திருமகன்' என்ற தலைமுறைப் பட்டம் சூட்டப்பட்டதே, இதுசூசையப்பரின் வம்ச வழிஅல்லாமல், வேறு எந்த வம்ச வழி மூலமும் நடைபெறவில்லை.

இயேசு மனித உருவெடுத்துப்பிறந்த சிறிது காலத்திற்குள் அவரை ஏரோதுவின்மரணப்பிடியிலிருந்துகாப்பாற்றும் பொருட்டு உடனே எகிப்துக்குப் புறப்பட்டுச் செல்ல சூசையப்பருக்கேவிண்ணகத்தால் அன்புக் கட்டளை பணிக்கப்பட்டது.வேறு எந்த ஒரு இறைவாக்கினருக்கும் கிடைக்காத தனிப்பெரும் பாக்கியம் இது.இயேசுவின் உலக வாழ்வின்போது அவரைக் காப்பாற்றி பேணி வளர்த்துப் பாதுகாத்து நல்ல தந்தையாகவும், ஆசானாகவும் திகழ்ந்து இயேசுவை அவருடைய மகத்தான மீட்புப் பணிக்கு தயாரித்தமைக்காகஇயேசு,சூசையப்பரைத் தவிர வேறு யாருக்கும் கடன் படவில்லை.

இயேசு தம் தாயை அளவின்றி நேசித்தார், அந்தத் தாயை கண்கலங்காமல், கஷ்டப்படாமல் இருக்க வைத்தது சூசையப்பர்தான். அவரைநன்கு அறிந்தவர்கள் இருவர்மட்டுமே. அவர்கள்அன்னை மரியாவும், இறைமகன்இயேசுவுமே.மற்றெல்லா இறைவாக்கினர்கள், புனிதர்கள், ஏன் திருமுழுக்கு யோவானைவிட அவர்உயர்வானவர் என்று திருச்சபை தந்தையர், இறையியலாளர்கள் கூறுவது முற்றிலும் உண்மையே.


'தந்தையே என்ஆவியை உம் கரங்களில் ஒப்படைக்கிறேன்' என்ற இயேசுவின் இறுதி மறுமொழியைஉச்சரிக்காமலேயேஇறைவனிடம் தம் ஆவியை ஒப்படைத்தவர் சூசையப்பர். இறைமகன் இயேசுவின் மண்ணக வாழ்வின்போது அவரின் தெய்வத் திருஉடம்பைத் தொட்டு, தூக்கி, தோள் மீதும், மார்புமீதும் போட்டு பாசத்துடன் வளர்த்தவர். நற்செய்தியில்தம் வாய் திறந்து பேசியதாகக் கூறப்படாத சூசையப்பர், தம் வளர்ப்பு மைந்தர் இயேசுவின்உலக மீட்புப் பணிக்கு தம் பணிவிடைகள் மூலம் மாபெரும் தொண்டாற்றியதால் இறைவன்அவருக்குதனிப்பெரும் சலுகைகளையும், மதிப்பும் மாட்சிமையும் அளித்தருளினார் நாசரேத்தில் திருக்குடும்பத்தின் தலைவராகவும், கன்னிமரியாவுக்கு கணவராகவும், பாதுகாவலராகவும், இயேசுவுக்கு வளர்ப்புத்தந்தையாகவும், ஆசானாகவும்சூசையப்பர் திகழ்ந்தார்.அவருடைய உயர்வு என்பது திருக்குடும்பத்தின் உயர்வாக இருந்தது. திருக்குடும்ப வாழ்வில் அவர்மேற்கொண்டபக்தி, புனிதம், தூய்மை,தியாகம் ஆகியபண்புகள் அனைத்திலும் சூசையப்பருக்கு நிகர் சூசையப்பரே எனப் பறைசாற்றுகின்றன.

திருத்தந்தை 23ஆம் அருளப்பர் புனித சூசையப்பரிடம் எல்லையற்ற பக்தி கொண்டவர். திருச்சபையானது மேலும் மேலும் புனித சூசையப்பர் பக்தியை வளர்க்கவும் பரப்பவும் இடைவிடாது பாடுபடும், ஏனெனில், புனிதரின் பரிந்துரை அதிக சக்தி மிகுந்தது, அவர் எல்லாக் காரியங்களிலும்பரிந்துரைக்கும் விசேஷமான அருளும், வரமும் பெற்றவராக விளங்குகிறார் என்று அறிவித்தார்.மேலும்சூசையப்பர்தம் உடல், ஆன்மாவுடன்விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்பதை பக்திக்குரிய நம்பிக்கையாக ஏற்றுக்கொள்வோம் என்ற அறிவிப்பை 1960ம் ஆண்டு மே திங்கள் 25ம்நாள்இயேசுவின்விண்ணேற்றத் திருநாளின்போதுவெளியிட்டார்.சிறப்பு வரங்கள் பெற்ற புனித சூசையப்பருக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உடலும் ஆன்மாவும் கூடிய உயிர்த்தெழுதலை இறைவன் வழங்கினார் என்பதை நாம் உறுதியாக நம்பலாம் என்று இறையியல் அறிஞர் சுவராஸ் என்பார் குறிப்பிடுகிறார்.

திருச்சபையின் அறிஞர் பெருமக்களில் ஒருவரான புனித பிரான்சிஸ் தே சேல்ஸ்இதே கருத்தை மற்றொரு நியாயமான கேள்வி மூலம் வலுப்படுத்துகிறார்.இந்த மண்ணுலகில் புனித சூசையப்பர் திருவுடல் சம்பந்தப்பட்ட 'அருளிக்கம்' எங்காவது இருந்தது, இருக்கிறது என்று கேள்விப்பட்டதுண்டா?என்ற கேள்வியைக் கேட்டு, இல்லை என்று திட்டவட்டமான மறுமொழியைஅவரே தந்து. சூசையப்பர்விண்ணகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதால் அவருடையபுனித உடல் இந்த உலகில் இல்லாத காரணத்தால், அவரின் திருவுடல் தொடர்பான அருளிக்கம் இல்லை என்று விளக்கம் தருகிறார்.


திருக்குடும்பத்தில் அன்னை மரியாவும், இறைமகன்இயேசுவும் புனித சூசையப்பரின்கனிவான வேண்டுதல்களை, அன்புக் கட்டளைகளைப் புறக்கணித்தது கிடையாது. விண்ணகத்தில் புனித சூசையப்பர் நமக்காகச் செய்யும் பரிந்துரைகளைஇவர்கள் நிச்சயம் புறக்கணிக்க மாட்டார்கள்.அந்த அளவுக்கு எல்லாம் வல்ல இறைவனாலும், அன்னை மரியாவாலும், இறைத்திருமகன் இயேசுவாலும் சிறப்பிக்கப்படும் புனித சூசையப்பரை நாமும் கொண்டாடுவோம், அவர்வழியாகஇறைவனின் திருச்சித்தத்துக்கு அடி பணிந்து வாழும் வரத்தில் நிலைத்திருப்போம்.


*****



# JONAH, NINEVEH AND THE BIG FISH

Help Jonah on his way to Nineveh.





பாலவாக்கம் பங்குதளம் உதயமாகி 25-ம் ஆண்டு "வெள்ளி விழாவை" காண்கின்றது. வெள்ளி விழா நினைவாக ஆலயத்தின் திருத்துாயகம் (Alter Area) புனரமைப்பு செய்ய திட்டமிட்டுள்ளோம். இந்த பணிக்கு உங்களுடைய தாராள நன்கொடை தந்து உதவுங்கள்.

**வங்கி விவரம்**

Name : Seashore St Antonys Shrlne
A/c No : 0682073000000168
Bank : South Indian Bank
Branch : Vettuvankeni
IFSC : SIBL0000682

# தவக்கால திருவழிபாட்டு நிகழ்வுகள் - 2025

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் | மொழி | சிறப்பிப்போர் |
|---|---|---|---|---|---|
| 05.03.2025 | புதன் கிழமை | காலை 6.30 மணிக்கு | திருநீற்றுப் புதன் திருப்பலிகள் | தமிழ் | |
| | | Morning 7:30 | Ash Wednesday Mass | English | |
| | | காலை 8:30 மணிக்கு<br>பகல் 11:00 மணிக்கு<br>மாலை 6:00 மணிக்கு | திருப்பலி<br>திருப்பலி<br>திருப்பலி | தமிழ்<br>தமிழ்<br>தமிழ் | |
| 07.03.2025 | திருநீற்றுப் புதனுக்குப் பின் வரும் வெள்ளி | மாலை 6:00 மணிக்கு | சிலுவைப்பாதை,<br>திருப்பலி | தமிழ் | பகுதி 1 அன்பியங்கள்<br>புனித மத்தேயு.<br>புனித மாற்கு,<br>புனித அசிசியார்,<br>புனித சவேரியார் |
| 08.03.2025 | Saturday | Evening 6:00 | Way of the Cross, Holy Mass | English | English Liturgy Group |
| 14.03.2025 | தவக்காலத்தின் முதல் வாரம் – வெள்ளிக்கிழமை | மாலை 6:00 மணிக்கு | சிலுவைப்பாதை,<br>திருப்பலி | தமிழ் | பகுதி 2 அன்பியங்கள்<br>குழந்தை இயேசு,<br>புனித தோமையார்,<br>லூர்துமாதா,<br>புனித பவுல் |
| 15.03.2025 | Saturday | Evening 6:00 | Way of the Cross, Holy Mass | English | English Liturgy Group |
| 21.03.205 | வெள்ளிக்கிழமை | மாலை 6:00 மணிக்கு | சிலுவைப்பாதை, திருப்பலி | தமிழ் | பகுதி 3 அன்பியங்கள்<br>பாத்திமா மாதா.<br>ஜெபமாலை மாதா,<br>ஆரோக்கிய மாதா,<br>புனித செபஸ்தியார்,<br>புனித மிக்கேல் |
| 22.03.2025 | Saturday | Evening 6:00 PM | Way of the Cross, Holy Mass | English | English Liturgy Group |
| 28.03.2025 | வெள்ளிக்கிழமை | மாலை 6:00 மணிக்கு | சிலுவைப்பாதை, திருப்பலி | தமிழ் | பகுதி 4 அன்பியங்கள்<br>புனித அருளானந்தர்,<br>புனித அன்னை தெரேசா,<br>புனித சூசையப்பர்,<br>புனித லூக்கா,<br>புனித அல்போன்சா |
| 29.03.2025 | Saturday | Evening 6:00 PM | Way of the Cross, Holy Mass | English | English Liturgy Group |
| | | | இரட்சகர் சபை குருக்கள் வழங்கும் தவக்கால சிறப்பு தியானம் | | |
| 23.03.2025<br>29.03.2025 | ஞாயிற்றுக்கிழமை முதல்<br>சனிக்கிழமை வரை | காலை 7.00 முதல் 9.00 வரை<br>மாலை 6.00 முதல் 9.00 வரை | இரட்சகர் சபை குருக்கள் இல்லங்களை சந்திக்கும் நிகழ்வு | | |
| 30.03.2025<br>04.04.2025 | ஞாயிற்றுக்கிழமை முதல்<br>வெள்ளிக்கிழமை வரை | மாலை 6.00 முதல்<br>இரவு 9:00 மணி | ஜெபமாலை, தியான மறையுரை, குணமளிக்கும் வழிபாடு, திருப்பலி<br>சிறப்பு ஆராதனை, நோய்கள் நீங்க, தீய கட்டுகளிலிருந்து விடுபட, மனக் காயங்கள் ஆற சிறப்பு வழிபாடு | தமிழ் | அருட்பணி. **லூயிஸ் ராஜ்** CSSR<br>அருட்பணி. **கெலன் ஜோஷ்** CSS |
| 05.04.2025 | Saturday | Evening 6:00 PM | Way of the Cross, Holy Mass | English | English Liturgy Group |
| 11.04.2025 | வெள்ளிக்கிழமை | மாலை 6:00 மணிக்கு | சிலுவைப்பாதை திருப்பலி | தமிழ் | இளையோர், பாடற்குழுவினர், வின்சென்ட் தே பால், கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் மரியாயின் சேனையினர், மறைக்கல்வி ஆசிரியர்கள் |
| 12.04.2025 | Saturday | Evening 6:00 PM | Way of the Cross, Holy Mass | English | English Liturgy Group |
| 13.04.2025 | குருத்து ஞாயிறு | காலை 6:00 மணிக்கு | குருத்தோலை மந்திரிப்பு பவனி ( பாலவாக்கம் பல்கலை நகர் நுழைவு வாயில்) திருப்பலி | தமிழ் | இளையோர் மற்றும் பாடற்குழுவினர் |
| | | Morning 9:00 AM | Palm Procession from St. Antony's Arch, Holy Mass | English | English speaking people |
| | | காலை 11:00 மணிக்கு<br>மாலை 6:00 மணிக்கு | திருப்பலி<br>திருப்பலி | தமிழ்<br>தமிழ் | |
| 17.04.2025 | புனித வியாழன் | மாலை 6.00 மணி | திருப்பலி, நற்கருணை இடமாற்ற பவனி | தமிழ் | அன்பியப் பொறுப்பாளர்கள் |
| | | Evening 6:00 PM | Holy Mass | English | English Speaking people |
| | | இரவு 8:30 மணிக்கு<br>இரவு 9:00 மணிக்கு<br>இரவு 9:30 மணிக்கு<br>இரவு 10:00 மணிக்கு<br>இரவு 10:30 மணிக்கு<br>இரவு 11:00 மணிக்கு<br>இரவு 11:30 மணிக்கு | ஆராதனை<br>ஆராதனை<br>ஆராதனை<br>ஆராதனை<br>ஆராதனை<br>ஆராதனை<br>ஆராதனை | | புனித சவேரியார் அன்பியம்<br>புனித அசிசியார் அன்பியம்<br>புனித மாற்கு அன்பியம்<br>புனித மத்தேயு அன்பியம்<br>குழந்தை இயேசு அன்பியம்<br>மரியாயின் சேனை, கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம்<br>இளையோர் |
| 18.04.2025 | புனித வெள்ளி | காலை 6:00 மணிக்கு<br>காலை 6:30 மணிக்கு<br>காலை 7:00 மணிக்கு<br>காலை 8:00 மணிக்கு<br>காலை 8:30 மணிக்கு<br>காலை 9:00 மணிக்கு<br>காலை 9:30 மணிக்கு | ஆராதனை<br>ஆராதனை<br>ஆராதனை<br>ஆராதனை<br>ஆராதனை<br>ஆராதனை<br>ஆராதனை | | புனித அருளப்பர் அன்பியம்<br>புனித அருளானந்தர் அன்பியம்<br>லூர்து மாதா அன்பியம்<br>புனித செபஸ்தியார் அன்பியம், மற்றும் மிக்கேல் அன்பியம்<br>புனித பவுல் அன்பியம்<br>புனித அன்னை தெரேசா<br>பாத்திமா மாதா அன்பியம் |
| | | காலை 10:00 மணிக்கு<br>காலை 10:30 மணிக்கு<br>பகல் 11:00 மணிக்கு<br>பிற்பகல் 11:30 மணிக்கு<br>பிற்பகல் 12:00 மணிக்கு<br>பிற்பகல் 12:30 மணிக்கு<br>மதியம் 1:00 மணிக்கு<br>மாலை 3.00 மணிக்கு | ஆராதனை<br>ஆராதனை<br>ஆராதனை<br>ஆராதனை<br>ஆராதனை<br>ஆராதனை<br>பெரிய வெள்ளி சிலுவைப்பாதை<br>ஆண்டவரின் திருப்பாடுகள் வழிபாடு | தமிழ் | ஜெபமாலை மாதா அன்பியம்<br>ஆரோக்கிய மாதா அன்பியம்<br>புனித சூசையப்பர் அன்பியம்<br>புனித லூக்கா அன்பியம்<br>தோமையார் அன்பியம்<br>புனித அல்போன்சா |
| | | Afternoon 3:00 PM | Good Friday Liturgy (St.Anthony's Hall) | English | English Liturgy Group |
| | | மாலை 4.30 மணிக்கு | மரித்த ஆண்டவர் ஊர்வலம் | | |
| 19.04.2025 | Easter Sunday | Night 09.30 | Easter Vigil Mass | English | English Liturgy Group |
| | | இரவு 10:30 மணிக்கு | பாஸ்கா திருவிழிப்பு திருப்பலி | தமிழ் | பங்குப்பேரவை |
| 20.04.2025 | உயிர்ப்பு ஞாயிறு | காலை 6.00 மணிக்கு<br>காலை 7.15 மணிக்கு | உயிர்ப்பு பெருவிழா திருப்பலி<br>உயிர்ப்பு பெருவிழா திருப்பலி | தமிழ்<br>தமிழ் | |
| | | Morning 09.30 | Easter Mass | English | |
| | | காலை 11.00 மணிக்கு<br>மாலை 06.00 மணிக்கு | உயிர்ப்பு பெருவிழா திருப்பலி<br>உயிர்ப்பு பெருவிழா திருப்பலி | தமிழ்<br>தமிழ் | |